# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு மார்கழிமாதம் 9-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 48-ம் இலக்கம்


# கொழும்பில் கத்தோலிக்க இல்லற சேவையாளர் வாரம்

கொழும்பில் கத்தோலிக்க இல்லற சேவையாளர் வாரம் இம்மாதம் 2-ந் திகதி சனிவாரம் ஆரம்பமாகிப் 10-ந்திகதி முடிவடையும். அன்றைய நிகழ்ச்சிகளைக் கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வந். டாக்டர் தோமஸ் கூறேஆண்டகையவர்கள் ஆரம்பித்து வைப்பார். அன்று, காலை 9 மணிக்குத் திவ்வியபூசையுடன் சேவையாளர் வார நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். அதிமேற்றிராணி யாண்டவரவர்கள் பிரசங்கம் நிகழ்த்துவார்கள். வார்த்தைப்பாடுகள் புதுப்பிக்கும் வைபவம் பாப்பரசரது கொடி உயர்த்தும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடைபெறும். இந்த நிகழ்ச்சியின்பின்னர் அதிமேற்றிராணியார் காலை 10-30 மணிக்கு கண்காட்சி ஒன்றையும் திறந்து வைப்பார். மாலை 5 மணிக்கு அதிமேற்றிராணியார் இல்லறத் திருத்தொண்டருக்குக் கொழும்பு ஆசனக்கோவிலில்உரைநிகழ்த்துவார்.

கத்தோலிக்க இல்லறத்தார் சேவை வாரத்தையொட்டி—இல்லறத் தொண்டர்களுக்கெனக் கொழும்பு அதிமேற்றிராசன விக்கார் ஜெனறல் மொன்சிங்ஞோர் அன்ரனி டி சேரம் அவர்கள் சுற்றுநிருபமொன்றை வெளியிட்டிருந்தார். அதன் சாரம் வருமாறு:

"இல்லறத்தார் திருச் சேவை வாரத்தின் முக்கியத்துவத்தை அதிகம் வற்புறுத்த வேண்டியதில்லை". பெரும்பான்மையான கத்தோலிக்கரின் உள்ளங்களில் அதிகதீவிரமாய் இயன்றளவு இரட்சணியதொண்டாற்ற அவர்களுக்குரிய கடமையைத்தூண்டி, புத்துயிரூட்டிவிடும் நோக்கத்துடனேயே சேவைவாரம் கொண்டாடப்படுகிறது. என்று தமது சுற்றுநிருபத்தில் விக்கார் ஜெனறல் சுவாமியார் குறிப்பிட்டுள்ளார். மேலும், கத்தோலிக்க இயக்கங்களிடையே ஐக்கியத்தையும், நல்லெண்ணத்தையும் வலியுறுத்துவதும் நோக்கமாகும்என்கிறுர் அவர்.

இன்னும், அக்கடிதத்தில்இல்லறத்தொண்டர் வாரமானது அதிமேற்றிராசனத்திலுள்ள இல்லறத்தொண்டர்களின் நிர்வாகக் குழுவினரால் ஏற்பாடுசெய்யப் பட்டுளது. தற்பொழுது விசுவாசிகள் மத்தியில் இருக்கும் திருத்தொண்டு இயக்கங்களை வளர்ப்பதும், அவற்றின் அங்கத்துவத்தைப் பெருக்குவதுமே இதன் நோக்கமாகும். இந்தத் திருச்சேவைவாரம், இம்மாதம் 10-ந் திகதி மாபெரும்மாநாட்டுடனும், கண்காட்சியுடனும் முடிவடையும். மாநாடு அர்ச். லூசியா ஆசனக்கோவிலிலும், கண்காட்சி கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர்மடத்திலும் முறையே இடம்பெறும்.

மேலும், சேவை வாரமானது விசாரணைப்பங்குகளில் உள்ள சேவை இயக்கங்களின் புனருத்தாரணத்துக்கும், அவற்றை உறுதிப்படுத்தவும், புதிய அங்கத்தினரைச் சேர்க்கவும் உறுதுணையாக அமையும். முன்னர் கத்தோலிக்க சேவை இயக்கத்தின் இணைப்பு நிர்வாகக் குழுவினருடன் சேர்ந்துழைப்பதில் காட்டிய ஆர்வத்தைவிட, அதிக ஊக்கத்துடன் சேவைவாரத்தில் பங்கெடுத்து, சேவைவாரம் ஆசனக்கோவிற்பற்றிலும், மீசாம்களிலும் அதிகபயன் விளைக்கக்கூடியதாய் ஒத்துழைக்கும்படிவேண்டுகிறேன்" என்று தமது கடிதத்தை முடித்திருக்கிறுர் அதி வண. விக்கார் ஜெனறல் சுவாமியார்.

## குருத்துவ தங்கயூபிலி

தஞ்சை மேற்றிராசனத்தின் விக்கார் ஜெனறலும், டொமஸ்டிக் ப்ரெலெற்றும், "வேளாங்கண்ணிக்குரல் ஒலி"யின் பத்திரிகாசிரியருமான வந். மொன்சிஞ்ஞோர் எம் மோத்தாவாஸ் சுவாமிஅவர்கள் தமது குருத்துவ அபிஷேகத்தின் 50-வது ஆண்டு நிறைவை நிகழும் டிசம்பர் திங்கள் மலரும் திகதி இருபத்துமூன்றில் காணப்பெறுவார்கள். தங்க யூபிலிக்கொண்டாட்டம் 1962 ஜனவரி 10, 11ஆம் தேதிகளில் தஞ்ஜையில் நடைபெறும். அன்னாரின் அன்பர்களும், சுற்றத்தாரும் அன்னருக்காக இறைவனை மன்ருடுவார்களாக.

## வத்திக்கான் இராசதந்திரிகளுக்கு அதிமேற்றிராணித்துவ பதவி

வத்திக்கான் இராச்சியத்தின் ஸ்தானிகரும், இராசதந்திரிகளும் அதிமேற்றிராணிமாராகப் பதவி உயர்ச்சி பெற்றிருக்கின்றனர். 1957-ல் நியுயோர்க்கைச்சேர்ந்த வண யோசெவ் மக்கியு கடைசியாக மேற்றிராணித்துவ பதவியின்றி எத்தியோப்பியாவுக்கு ஸ்தானிகராக நியமனம்பெற்ருர். இவ்வழக்கம் இப்போது கைவிடப்பட்டது. வத்திக்கான் 42 நாடுகளுடன் இராசிய உறவு கொண்டிருக்கிறது.

## தான் ஓர் எழுத்தாளராக எண்ணினுர் பாப்பு.

"நான் ஓர் இளங்குருவாயிருக்கும்பொழுது எழுத்துவன்மை எனக்கு உண்டென எண்ணினேன்", என ரோமையிலுள்ள அந்நிய அச்சகச்சங்கத்தினருக்குப் பேட்டியளித்துக் கூறினுர் அருளப்ப பாப்பு.

எனதுமுதல்முயற்சியைஅச்சில் கண்டபொழுது பெற்ரேர் தமது முதற் குழந்தையைக் காணும் பொழுது அனுபவிக்கும் இன்பம் அனுபவித்தேன். என்னுடைய இன்றைய நிலைபரத்தில் மௌனமாயிருக்கவேண்டிய தருணத்தையும், பேசவேண்டிய சந்தர்ப்பத்தையும் நன்கறிந்திருக்க வேண்டியதவசியம்.

தாம் வாசிக்கக்கூடிய புதினத்தாள்களை இயன்றதருணங்களில் வாசிப்பதாகக் கூறினுர்.

சம்பாவிலு இக்காலத்திற் சீவித்திருக்கில் ஓர் எழுத்தாளனுயிருந்திருப்பார் என்ருர்.

# வேத போதக நாடுகளில் திருச்சபையின் வளர்ச்சி

## ஐப்பசி 1960 — ஐப்பசி 1961

வேதபோதக நாடுகளைக் கண்காணிக்கும் திருச்சங்கம் சென்ற ஓராண்டிலே வேதபோதக நாடுகளுக்காகச் செலவிட்டிருக்கும் தொகை 30 மில்லியன் டாலர் (சுமார் ரூ. 15கோடி). இத்தொகை மூன்று வாய்க்கால்கள் மூலம் பாய்ந்து வேதபோதக நாடுகளின் மூலை முடுக்கெல்லாம் செழிக்கச் செய்துள்ளது. இம்மூன்று வாய்க்கால்கள்:

வேதபோதகசபை:
20,311,022 டாலர்.

பரிசுத்த இராயப்பர்சபை:
3,600,000 டாலர்.

பரிசுத்த பாலர்சபை:
6,201,060 டாலர்

இத்தொகையைப் பெற்ற மேற்றிராசனங்கள் முதலிய ஆட்சிப் பிரிவுகளின் எண்ணிக்கை: 741.

பரிசுத்த இராயப்பர்சபை தனக்களிக்கப்பட்ட தொகையை, வேதபோதக நாடுகளிலுள்ள 93 பெரிய சிறிய குருமடங்களுக்கு உதவியுள்ளது. இச்சபை பெரிய குருமடங்களிலுள்ள 5,500 மாணவர்களையும் சிறிய குருமடங்களிலுள்ள 26,711 மாணவர்களையும் சென்ற ஆண்டிலும் இவ்வாண்டிலும் பராமரித்துள்ளது.

திருச்சபையின் வளர்ச்சியும் மகிழ்ச்சியளிக்கும் வகையிலேயே முன்னேறியுள்ளது. மாதந்தோறும் ஏறக்குறைய 1,000 மனந்திரும்புதல் நடந்து வந்துள்ளதாக ஹொங்காங் அறிக்கை கூறுகின்றது. தென் வியற்நாமில் சென்ற நான்கு ஆண்டுகளில் 63,000 பேர் மனந்திரும்பியுள்ளனர். குயின்ஹோன் மேற்றிராசனத்தில்இவ்வாண்டுத்தொடக்கத்தில் 1641 ஞானஸ்நானங்கள் அளிக்கப்பட்டன. கொரியாவில் இவ்வாண்டு விபூதிவிழா முதல் பாஸ்கு விழாவரை மனந்திரும்பியவர்கள் எண்ணிக்கை 12,000. இவ்வாறு இன்னும் பல.

வேதபோதக நாடுகளில் புதிதாக நியமனம் பெற்ற ஆண்டகைகளின் எண்ணிக்கை 42. இவர்கள் 22 நாடுகளைச் சேர்ந்தவர்கள். இந்தியாவிலே மூவர்.

திருச்சபையின் இவ்வளவு வளர்ச்சியும் நம் செப உதவியால், பொருள் உதவியால். ரோமை செலவுசெய்யும் இவ்வளவு தொகையும் அனைத்துலககத்தோலிக்க மக்கள் அளிக்கும் உதவிதான். ஆகவேதான் வேதபோதகத் திருச்சங்கத்தைக் கண்காணித்துவரும் மேன்மைதங்கிய கர்தினுல் அகாஜியானியன் ஆண்டகை கூறுகின்ருர்: "நீங்கள் அளித்துள்ள இப்பெரும் உதவிக்கு எம் நன்றி! இத்தொகை வேதபோதக நாடுகளுக்குப் பெரும்உதவியாக இருந்தது. இறைவன் உங்களை ஆசீர்வதிக்கட்டும்! உங்கள் பண்பட்ட உள்ளத்தையும், தாராள மனப்பான்மையையும் என்றும் காப்பாற்றி, மென்மேலும் வளர்த்துக் கொள்வீர்களாக!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## மட்டக்குளியா பரிசுத்த தேவதாயார் ஆலயத்தின் நூற்றுண்டுவிழா

இவ்வாண்டு மார்கழி மாதம் 10-ந் தேதி முகத்துவாரக் கத்தோலிக்கர் சரித்திரத்தில் புதியதோர் சகாப்தம் ஆரம்பமாகின்றது எனலாம். முகத்துவாரத்தின் வடபால் அமைந்துள்ள மட்டக்குளியாவில் தேவதாயாரின் ஆலயத்தின் நூற்றுண்டுவிழா கொண்டாடப்படும். சனிவாரம் கொழும்பு அதிமேற்றிராணியார் வேஸ்பர் பாடுவார். காலி மேற்றிராணியாரால் ஞாயிற்றுக்கிழமை திவ்விய பாடற்பூசை நிறைவேற்றப்படும். பெருந்தொகையான குருமாரும், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளும் சமுகம் கொடுப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1628-ம் ஆண்டு மட்டக்குளியாவிலிருந்து சிறிது தொலேவில் களனி கங்கையின் முகத்துவாரத்தில் அர்ச். ஸ்நாபக அருளப்பரின் ஆலயமும், அநாதைச் சிறுவர் மடமும் இலங்கையின் முதல் மிஷனரிமாரான பிரான்சீஸ்கன் சபைக் குருமாரால் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

1656-ம் ஆண்டு டச்சுக்காரர் ஆட்சியைக் கைப்பற்றினர். ஆட்சி மாற்றத்தின் விளைவுகள் நாட்டின் மற்றைய பகுதிகளைப்போலக் கொழும்பு தேவாலயங்களுக்கும் ஒரே தன்மையானவையாகவே இருந்தன. அதனால், அர்ச். ஸ்நாபக அருளப்பர்ஆலயம் ஒரு வைத்தியசாலையாக மாற்றப்படலாயிற்று. கத்தோலிக்கர் கலாபனைக்குட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். குருமாருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. கத்தோலிக்கபிள்ளைகள் புரொட்டஸ்தாந்த பள்ளிக் கூடங்களுக்கே சென்று கல்விபெற வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்நிலையில் 1691-ம் ஆண்டு இலங்கை வந்த வண. யோசெவ் வாஸ் சுவாமிகளின் அயரா உழைப்பினால் கத்தோலிக்க திருச்சபை மீண்டும் புத்தொளி பெற்றது. தியான சம்பிரதாயசபைக் குருமார் ஆசா. யோசெவ்வாஸ் அடிகளைப் பின்பற்றித் திருமறையைக் காக்க முயன்றுவந்தனர்.

1796-ம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சியைக் கைப்பற்றியதும் சமய சுதந்திரம் அளிக்கப்பெற்றது. கத்தோலிக்கருக்குச் சுயாதீனம் அளிக்கப்பட்டது. முகத்துவாரக் கத்தோலிக்கரும், மட்டக்குளியாக் கத்தோலிக்கரும் கொட்டகேனவிலுள்ள மிஷனரிமாரின் மேற்பார்வையிலிருந்தனர். 1852-ம் ஆண்டில்தான் முகத்துவாரம் புறம்பான ஒரு விசாரணைப்பங்காயிற்று.

மட்டக்குளியாவில் அமலோற்பவ அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் அக்காலத்தில் மண்ணால் கட்டப்பட்டதோர் சிறிய குடிசையாகவே விளங்கிற்று. அவ்வாலயம் கண்டி—நீர்கொழும்பிலிருந்து கொழும்புவரும் பண்டைய வீதியில் அமைந்திருந்தது. இவ் வீதி வழியாகத்தான் கண்டிக் கடைசி மன்னன் பிரித்தானியரால் கைதியாக்கப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டான். தேவஆராதனைக்காக உபயோகமான மாதாகோவிலான கொட்டில் அழிக்கப்பட்டு, 1861-ம் ஆண்டு இத்தாலியகுரவரான வண. பேதுரு இலாறி சுவாமி அவர்களால் புதுக்கிக் கட்டப்பட்டது.

1883 இல் கொழும்புப்பகுதி அமலோற்பவ மரியநாயகி பரித்தியாகிகள் பரிபாலனத்துக்கு வந்தபின் கொழும்புப்பகுதியிலும், வெளியிலும் பலதிருத்தங்களும், முன்னேற்றங்களும் உண்டாகின. 1889-ம் ஆண்டு முகத்துவாரம் இரண்டு விசாரணைப்பங்குகளாகப் பிரிக்கப்பட்டு, அர்ச். ஸ்நாபக யுவானியார்ஆலயமும், தேவதாயாரின் ஆலயமும் ஒரு குரவரின்கீழ் இணைக்கப்பட்டது. வண. அகுஸ்தீன் டேவி, ஓ. எம். ஐ. அடிகளார் முதற் கட்டளைக் குரவரானார். இன்றுள்ள அலங்காரமான பீடம் 1886-ல் கட்டப்பட்டது. 1904-ம்ஆண்டில் அமலோற்பவ அன்னையின் திருச்சுரூபம் ஆலயப்பொன்விழாவின் ஞாபகமாக ஆலய முன்றிலில் நிர்மாணிக்கப்பட்டது. பழைய ஆலயம் கத்தோலிக்கமக்களுக்குப் போதியதன்று என்று கண்டமையால் புதிய ஆலயம் அமைக்க வண. லகாத்து அடிகளாரால் திட்டமிடப்பட்டது. 1920 இல் லகாத்து சுவாமியாருக்கு உதவியாக வந்த வண. தியடோர் லபுறே சுவாமியாரால்தான் புதிய ஆலயம்நிர்மாணிக்கப்படலாயிற்று. இன்று நூற்றுண்டுவிழாகொண்டாடும் பழைய ஆலயத்தின் ஒருபகுதியை இன்னும் இப்புதிய ஆலயத்தின் ஒருபகுதியாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம். “கொதிக்” அமைப்பிலே நிர்மாணிக்கப்பட்ட இவ்வாலயத்துக்கு அரும்பணி ஆற்றியவர் வண. லபுறே அடிகளார்தான். ஆலயப்பணிக்கு நிதி திரட்டுவதில் தம் வயோதிபத்தைப் பாராமல் அயராது உழைத்தார். பழைய பத்திரிகைகளைக் கொழும்பு வீதிகளில்விற்று நிதிசேர்த்தவர்இவர். பிரான்ஸ்தேசம்அளித்த அரும்புதல்வரான வண. லபுறே அடிகளாரை இன்றும் மக்கள் மறந்திலர். இவர் பதினொரு ஆண்டுகள் இங்கு பணிசெய்து நீங்கியபோது, மாதாகோவில் கிறிஸ்தவர்கள் புறம்பான விசாரணைப்பங்காகக் கூடியநிலையை அடைந்தனர். 1932-ம் ஆண்டு இவ்வாலயம் அர்ச். ஸ்நாபக அருளப்பரின் ஆலயத்தை விட்டுப் பிரிந்து தனியான மீசாமாகியது. வண. அன்ரனி வார்ண, ஓ. எம். ஐ. சுவாமியவர்கள் மாதாகோவிற்பங்கின் முதற் கட்டளைக் குரவரானர். இன்று இலங்கையிலுள்ள அமலோற்பவ மரியநாயகி பரித்தியாகிகள்சபையின் அதிக வயதுசென்ற குருவான வண. வார்ண அடிகளார்க்கு இன்று 93 வயதாகிறது. அவர் தற்சமயம் மக்கோனவில் இருக்கிறார்.

இன்று, இந்த விசாரணைப்பங்கானது உன்னத ஸ்திதியில் உள்ளது என்று துணிந்து கூறலாம். தேவ அழைத்தல்களால் நிறைந்து விளங்கும் இப்பங்கு, திருச்சபைக்கு அநேக குருமார், சந்நியாசிமார், கன்னியாஸ்திரிமாரை அளித்துளது. மட்டக்குளியா . தற்சமயம் பிரான்சீஸ்கன், நற்கருணை கார்மேல்சபைக் கன்னியரின் மடங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. பல பத்திச் சபைகளும், சங்கங்களும் இங்கு நிலவித் தொண்டாற்றிவருகின்றன. நல்லாயன் சபைக் கன்னியர்மடமும், கலவன் பாடசாலையும் இங்குளது. இவ்வண்ணம் இந்த விசாரணைப்பங்கு வளர்ந்து இலங்கைத் திருச்சபையின் சிரசில் ஓர் ஒளிரும் விண்மீன்போலத் திகழ்கின்றது.

### நன்றித்துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தினும், மடுமாதா, அர்ச். நீக்கிலார், அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியார் இவர்களுடைய வேண்டுதலின் பலனும்நானடைந்த நன்மைகளை நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கத் தாமதித்ததற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

என். எல்.

### முருங்கனில் பரிசளிப்பு விழாவும் வெள்ளி விழாவும்

முருங்கன் கிறிஸ்துராசா பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவும், அப்பாடசாலைத் தலைமைஆசிரியரான திரு. ச. நீக்கிலாப்பிள்ளை அவர்களின் ஆசிரியசேவை வெள்ளிவிழாவும் இம்மதி 1-12-61 இல் மிகவும் சிறப்பாக நடந்தேறின. விழாவுக்கு வட்டார வித்தியாதரிசி திரு. ச. நவரெத்தினம், B. A. அவர்கள் தலைமைவகித்தார். இவ் விழாவின்போது பாராளுமன்ற உறுப்பினரான திரு. வீ. ஏ. அழகக்கோன் அவர்களும், கட்டளைக்குரவர் வண. தேவராசா அவர்களும் சமுகமாயிருந்தனர். காலையில் யூபிலிநாயகராது பாடற்பூசையும், அதைத்தொடர்ந்து 8 மணிக்குப் பாடசாலைக் கொடியேற்றமும், ‘ரெனிகொயிட்’ விளையாட்டுப் போட்டியும் நடந்தேறின. வாழ்த்திகழ்களும், அன்பளிப்புகளும், பாராட்டுரைகளும் யூபிலிநாயகருக்கு அளிக்கப்பட்டன. பாப்பரசர் அருளிய ஆசீர்வாதப் பத்திரமும் வழங்கப்பட்டது. வித்தியாதரிசகர் அவர்கள் பரிசில்கள் வழங்கினர். ஈற்றில் விழா நாயகரின் உரையுடனும், நன்றியுரையுடனும் விழா நிறைவெய்தியது.

## தந்தை — குடும்பத்தலைவன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இதை உணர்ந்தும் பயனில்லை. ஏனெனில், வீடுதான் ஆரம்பபாடசாலை. நாளாந்த செலவுக்கு வேண்டிய ஊதியம்பெற, அதிகநேரம் வெளியேதிரியும் தந்தையர்களை எப்படி நாம் குற்றஞ் சாட்டுவது? அப்படிப்பட்ட தந்தையர்கள், அந்தக்கடமையையாவதுசரி செய்து குடும்பத்தை நடத்திவந்தாலே போதுமானது என்றுதான் நாம் கூற வேண்டும். ஆனால், இன்னும் சிலர், பணம்...பணம்...என்று பயித்தியம் பிடித்து இரவுபகலென்று பாராமல் உழைக்கிறார்களே! அவர்களுக்கும் இப்பாடம் புத்தியில்படிந்துதான் ஆகவேண்டும்.

வீட்டில் குடும்பத்துடன் இருக்கும் பொழுது சந்தோஷமடையும் ஆடவன் எவனோ அவனே நற்தந்தை. அன்றாட உணவளிக்கும் பொறுப்பாளி என்று மட்டுமல்ல, மனைவிமக்களுடைய பாதுகாவலராகவும், கூட்டாளியாகவும் அத்தந்தை இருப்பதைப்பற்றி யார்தான் புகழ்ந்து பேசமாட்டார்கள்? தந்தை மக்களின்மட்டில், விசேடமாக ஆண்குழந்தைகளின்மட்டில் மிக்ககரிசனையாயிருக்க வேண்டியது. ஏனெனில், அந்த ஆண்குழந்தைக்கு இன்று தந்தை அளிக்கும் பயிற்சியிற்தான் நாளைய புதுச்சமுதாயம் அடங்கியுள்ளது. குழந்தைகள் புதிய புதுப்பிரச்சினைகளுடன் தன்னிடம்வரும் பொழுது, தந்தை அன்புடனும் ஆதரவுடனும் அப்பிரச்சினைகளை அவர்களுக்குப்புரியும் முறையில்தீர்த்துவைப்பது தந்தையின்கடமை, வழமையாக நடப்பது என்ன? ஏதும் கேள்விகேட்டதும், “உனக்கு அது விளங்காது” என்று தந்தைகூறி விடுகிறார். இந்த மறுமொழி வெகுசுருக்கமானது. இதனால் உண்டாகும் கேட்டை தந்தை உணருவாரா? கேட்டவினாவுக்கு விடையளித்துவிடுவதே நன்று. இதனால் யாவருக்கும் நன்மையே. இதுவே நற்தந்தையின் குணம்.

தந்தை குடும்பத்தலைவன். இவ்விதமான நற்தந்தைக்குக் கடவுள் அளிக்கும்பாக்கியமோ சொல்லிலடங்காது. கண்கண்ட தெய்வமென அவனுடைய மனைவிமக்கள் அவனை அன்புடன்வணங்குவர். அவனுடைய இக்கட்டு இடைஞ்சல்களில் உதவியும் ஆறுதலும் அளிக்க பின்வாங்கமாட்டார்கள். நாலுபேருக்கு மத்தியில் தானும் ஓர்பெரிய குடும்பத்தலைவன் என்று வீரம்தட்டிப் பேச ஏன் இனித்தயங்க வேண்டும்? அவன்தான் ஒரு குடும்பத்தைக் கரையேற்றிவிட்டானே. கடவுளுக்கு முன் நின்று தனது கணக்கை ஒப்பிக்கும் பொழுது அவன் அனுபவிக்கும் ஆனந்தம்......! ஏனெனில், கடவுளின் விருப்பப்படி உலகத்தில் நடந்தானல்லவா? “நல்லது, நம்பிக்கையுள்ள நற்தந்தையே! நீ உன் இராட்சியத்துட் பிரவேசி” என்று ஆண்டவர் கூறக் கேட்டதும் அவன்மனப்பூரிப்படைந்து விடுவானல்லவா? ஆம்...நற்தந்தை எவனோ அவன் பாக்கியவான்.

தந்தைக்குரிய பற்பல கடமைகளில் சிலவற்றை எடுத்துக்கூறினேம். இக் கடமைகள் கடவுளின் பிரதிநிதிகளில் ஒருவர் என்று தந்தையைக்காட்டும். தந்தை—குடும்பத்தலைவன் என்னும் இப்பெரிய அழைத்தலை இன்னும் அறியவிரும்பும் தந்தையருக்கு நாம் கடைசியாகக் கூறுவது: பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள எவ்வித பிதாத்துவ நாம காரணத்திற்கும் ஊற்றாகிய பிதாவிடம் இருந்து எமதுபிதாக்கள் பாடம் கற்றுக்கொள்ளக்கடவார்களாக.

**தமிழாக்கம் ஞா. செ. ப.**
ஞானப்பிரகாசர் தமிழ்மன்றம்
தேசியகுருமடம்.



### பரமபதமடைந்த திரு. வ. சந்தியாப்பிள்ளை அவர்களின் 6-ம் வருட ஞாபகார்த்த அனுதாபம்

பிறப்பு: 25-7-1880 — இறப்பு: 10-12-1955

திருவளர் இலங்கைமாதேவியின்சிரமென
மருவளர் யாழ்ப்பாண மாபெரும் பிரிவினில்
பெருமைசேர் அளவெட்டிப் பெரும்பதி தன்னில்
அருமைசேர் சந்தியா அண்ணல்
சுந்தர வடிவழகன் சுதன்பாதம் தேடிச்
சுபஸ்வீ கரணமடைந்த ஆறும்வருட
ஞாபக வருகையைஉன்னி
உரிமைப்பெரியோர் உளங்கனிந்தேத்த
அன்னவர் அளித்த மகளீர்மூவர்
அண்ணலைப்பிரிந்த ஆற்றொணுத் துயரால்
ஆற்றலும் இழந்து, ஆக்கையும் சோர்ந்து
கலங்கிடும் எம்முடன் கண்ணீர்சிந்தி
விந்தை யுலகைவிட்டுச் சிந்தைகொள்ளா
இன்பநாதனடி தந்தைஆத்மா சாந்தமாய்ச்சேர
அன்பெனும் மலரால் அடிபணிந் தையனை வாழ்த்தி
ஆறுதல்கூறி ஆவனசெய்ய
அன்புடன் அழைத்தோம் அன்பரே வருக!

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரலோக பூலோக இராக்கினியே! பாழடைந்த கணவாயில் புதிதாய் உதித்த நம்பிக்கையின் வானவில்லே! அண்டினோரை ஆதரிக்கும் சதாசகாய நாயகியே உமது இரக்கத்தினாலும் வேத சாட்சியான யூதாததேயு அப்போஸ்தலர், அர்ச். அந்தோனியார் வாயிலாகவும் எனக்குக் கிடைத்த உதவிக்கு எனது நன்றியறிதலைக் கூறுகின்றேன். தாயே உமது உதவி கிடைத்ததும் பத்திரிகையிற் பிரசுரிக்க நேர்ந்ததின்படி இதனைப் பிரசுரிக்கின்றேன். உமது புகழ் உலகெங்கும் பரவுவதாக.

க. அ. ரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## சனசமூகநிலைய மான்யம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சனசமூகநிலையங்களுக்குமான்யம்வழங்கும் விஷயமாய் இம்முறை அரசாங்கம் கடுமையான சிக்கனத்தைக் கடைப்பிடித்திருக்கிறது. அதனால் சென்றவருடம் வழங்கிய மான்யத்திலும் இவ்வருடம் 12,000 ரூபாவுக்குமேல் குறைந்திருக்கிறது. சென்றவருடம் கிராமச்சங்க, பட்டினசபை, மாநகரசபை நிலையங்களுக்கென 42,275ரூபா வழங்கப்பட்டிருந்தபணம் இவ்வருடம் 30,300 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதிலும் மாநகரசபையைச் சேர்ந்த சனசமூகநிலையங்கள் முற்றாக மான்யமில்லாது விடப்பட்டிருக்கின்றன.

## பாடசாலைகளில் பரிசோதனை

ஆரம்பபாடசாலைகளிலே பிள்ளைகளைச் சேர்க்கும்விஷயமாய்க் கல்விமந்திரிவிடுத்த கட்டளைகளைப் பாடசாலைகளின் தலைவர்கள் கடைப்பிடிக்கிறார்களாஎன்பதைக் கண்டறியுமாறு விசேஷஅதிகாரிகள்சென்று விசாரிக்கவிருக்கிறார்கள். அப்போதுகட்டளைகளை உதாசீனஞ்செய்துள்ள பாடசாலைகளின் தலைவர்கள்மீது கல்விமந்திரியால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விசேஷஅதிகாரிகள் திடீரெனச் சென்று பாடசாலைகளைத்தரிசித்து, ஒவ்வொரு பாடசாலையிலும் அதிகம்சமீபமாகவுள்ள பிள்ளைகள் முதலிடம்கொடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என்பதை நிச்சயிக்குமாறு பிரவேச இடாப்புகளைப் பரிசோதிப்பார்கள்.

## இலங்கை-இந்திய வர்த்தகம்

வர்த்தகமந்திரி இந்தியஅரசாங்கத்துடன் செய்துள்ள புதியவர்த்தக உடன்படிக்கைப்படி, 1,500தொன் றப்பரும், 15,000 தொன் கொப்பறாவும், 7,500 தொன் தேங்காய்எண்ணெயும் கூடுதலாகவாங்கவும், அதிகமானபுகையிலையை இறக்குமதிசெய்யவும் இந்திய அரசாங்கம் இணங்கியுள்ளது. ஐந்து இலட்சம்ரூபா வரை பெறுமதியான சிறந்தஇனக் கைத்தறிநெசவுதுணிகளை இறக்குமதிசெய்ய இலங்கை வர்த்தக மந்திரி காரியாலயம் இசைந்துள்ளது. இந்தத்துணிகள் யாரொன்று இரண்டு ரூபாவுக்குமேல் விற்பனவாகும் இனத்தைச் சேர்ந்தன.

## பதினோராயிரம் மனுக்கள்

இலங்கை இராணுவத்திலே சாதாரண வீரர்வரிசையில் காலியாயிருந்த 150 ஸ்தானங்களுக்கு மனுச்செய்யுமாறு விளம்பரஞ் செய்யப்பட்டபோது 11,000 பேருக்குமேல் மனுச்செய்தனர். ஆறும்வகுப்பில் அரங்கேறியவர்களே இந்தப்பதவிக்குத் தகுதியுடையவர்களாயிருந்தும் அவர்களில் மூவாயிரம்பேர்வரை எஸ். எஸ். சி. தாரதரப்பத்திரம் உடையவர்கள். அதனால் இவர்கள்நீங்கலாக எஞ்சிய 8,000 பேரும் முதல்தெரிவிலேயேநீக்கப்பட்டு மூவாயிரம் பேருமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். இவர்களிலும் உயரம், மார்பளவுஆகியன குறைந்தகாரணமாக 2,500பேர் நீக்கப்பட்டனர். பின்னர்தேறிய 500பேரிலும் 150பேர் தெரிவுசெய்யப்படலாயினர்.

## டக்றரின் இடமாற்றம்

மன்னார்மாவட்ட வைத்தியஅதிகாரியாய் இருந்துவந்த டக்றர் ஏ. வைத்தியலிங்கம்அவர்கள் யாழ்ப்பாண நீதிப்பரிபாலனபகுதி வைத்தியஅதிகாரியாக இடமாற்றம்செய்யப் பெற்றிருக்கின்றார்.

## கத்தோலிக்க சமயபாட ஆசிரியர்கள்

தகுதியுடையவர்களென்று மேற்றிராணிமார்களால் அதிகாரப்பத்திரம் வழங்கப்பெற்ற ஆசிரியர்களே அரசாங்க பாடசாலைகளிலும், வித்தியாதிபதியினது முகாமையின்கீழுள்ள பாடசாலைகளிலும் கத்தோலிக்க சமயபாடம்கற்பிக்க அனுமதிக்கப்படுவார்கள். இது விஷயமாய்க் கொழும்பு அதிமேற்றிராணியார் செய்துகொண்ட வேண்டுகோளின்பேரிலேயே கல்விமந்திரி அவ்வாறுசெய்ய இசைந்திருக்கின்றார். அதனால் பாடசாலையொன்றிலே கத்தோலிக்கசமயபாடம்கற்பிக்க ஓர் ஆசிரியரை நியமிக்குமுன் அந்தப்பாடசாலை இருந்துவரும் மேற்றிராசனத்தைச்சேர்ந்த மேற்றிராணியாரால் வழங்கப்பெற்ற தகுதித்தாராதரப்பத்திரத்தை அவர் கொண்டிருக்கிறாரென்பதைக் கவனிக்குமாறு பாடசாலைகளின் தலைவர்களுக்கு வித்தியாதிபதி தெரிவித்திருக்கின்றார். ஆகவே, கத்தோலிக்க திருச்சபையால் வழங்கப்படும் தகுதித்தாராதரப் பத்திரங்களைக் கொண்டுள்ள போதியதொகையான ஆசிரியர்களை இடமாற்றஞ்செய்வதற்கான ஒழுங்குகளை வித்தியாபகுதி தற்போது செய்துவருகின்றது. பொதுத்தாராதரப் பத்திர பரீட்சைஎடுக்கும் மாணவர்களுக்கெல்லாம் சமயம் ஓர்கட்டாயபாடமாக இருப்பதால் குறைந்தபட்சம் ஒருபாடசாலைக்குத் தகுதிப்பத்திரமுடைய ஒரு கத்தோலிக்க ஆசிரியரையாவது நியமிப்பதென்ற அடிப்படையிலேயே இந்த இடமாற்றங்கள் செய்யப்படும். தற்போது அரசாங்கத்தின்கீழும், வித்தியாதிபதியினது முகாமையின் கீழும் சுமார் எண்ணாயிரம் பாடசாலைகள் இருக்கின்றன.

## திருமணம்

கொழும்பிலே ஓர்நியாயவாதியாகக் கடமையாற்றிவருகின்ற திரு. யோசெவ் முத்தையா அவர்களுக்கும், யாழ்ப்பாணம், அரசினர் பெரியஆஸ்பத்திரியிலே வைத்திய அதிகாரியாகப் பணியாற்றிவருகின்ற டக்றர் பி. முத்தம்மா அவர்களுக்கும் சென்ற 2-ந்திகதி சனிக்கிழமைகாலை யாழ்ப்பாணம், அர்ச். மரியநாயகியின் ஆசனக்கோவிலிலே பெருந்திரளான இனசனர், சிநேகிதர், அபிமானிகள் சமூகமளித்திருக்கச் சம்பத்திரிசியார்கல்லூரிப் பேராசிரியர் வண. ஜே. பிரான்சீஸ்சுவாமியவர்களால் திருமணவைபவம் பக்திப்பரவசமாக நிறைவேறியது. அதனைத்தொடர்ந்து யாழ்ப்பாண நகரசபைமண்டபத்திலே பிரமுகர்களும், பெண்மணிகளும் சமூகமாகப் புதுமணத்தம்பதிகளுக்குச் சமபிரமமான ஒருவரவேற்புஉபசாரம் அளிக்கப்படலாயிற்று. தம்பதிகள் பல்லாண்டு வாழ்க!

## சாரதிகளுக்கு எச்சரிக்கை

பஸ்களிலே இடமிருக்கும்போது அவைகளை நிறுத்தவேண்டிய இடங்களில்நிறுத்திப் பிரயாணிகளை ஏற்றிச்செல்லவேண்டும்; எழுத்துமூலம் உத்தரவுபெற்றிருந்தாலன்றி மற்றப்படி அவைகளை நிறுத்தாமல்போவது குற்றமாகும்; இந்தக்குற்றத்திற்காகப் பஸ் சாரதிகள் வேலையிலிருந்து நீக்கப்படலாமென்று இலங்கைப் போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

## வாழ்க்கைச்செலவுப் புள்ளி

சென்ற கார்த்திகை மாதத்திலே கொழும்பில் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை 105·9என்றுபுள்ளிவிபரப் பகுதி வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகின்றது.

## யாழ்ப்பாண நூல் நிலையம்

யாழ்ப்பாண நூல்நிலைய கட்டடத்தைப் பூர்த்திசெய்வதற்கெனச் சென்ற சனிக்கிழமை இங்கு நடத்தப்பட்ட கொடித்தினத்திலே 10,000 ரூபாவரை சேர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது. இதற்கெனக் கொழும்பிலுள்ள தமிழ்ப்பேசும் மக்களிடமிருந்து நிதிசேகரிக்கும் ஒழுங்குகளைச் செய்வதற்காக யாழ்ப்பாணமேயர் திரு. ரி. எஸ். துரைராசா அவர்கள் தலைமையிலே ஒருகுழு அங்குசெல்லவிருக்கிறது.

## பயிற்சிபெறச் செல்லுகின்றார்

வெளிநாட்டுத் தந்திப்போக்குவரத்துச் சேவையிலே உதவிஎஞ்ஜினியராய் இருந்துவந்த திரு. என். அந்தோனிப்பிள்ளை அவர்கள் சர்வதேச வானொலிப் போக்குவரத்துச் சேவையில் விசேட பயிற்சி பெறுவதற்காகப் பிரித்தானிக்குச் செல்லுகின்றார். இவர் சில்லாலை வாசராயிருந்து காலஞ்சென்ற திரு. நிக்கொலாப்பிள்ளை அவர்களின் இரண்டாவது புதல்வராவர்.

## சிங்கள அரசாங்க ஊழியர்கள்

யாழ்ப்பாண மாவட்டத்திலே அரசாங்க உத்தியோகமொழியாகிய சிங்களத்தைத் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு வருகிறதைமாதத்திலே 112சிங்கள அரசாங்கஊழியர்கள் நியமனஞ்செய்யப்பெற்று யாழ்ப்பாணத்திலே கடமையாற்றுவார்களெனத் தெரியவருகிறது. அதனால் இங்கே கடமைபார்த்துவந்த தமிழ்அரசாங்க ஊழியர்களான அநேகர் வருகிற தைமாதம் 1-ந்திகதிதொடக்கம் பிறவிடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர். ஏற்கனவே சிங்கள அரசாங்க ஊழியர்சிலர் யாழ்ப்பாணம் வந்துவிட்டனர். ஏனையோர் இந்த மார்கழிமாத இறுதியிலே இங்குவந்துசேருவர். கருமாதிகாரிகளின் கந்தோர்கள், தபாற்கந்தோர்கள், றெயில்வேஸ்ரேஷன்கள், மற்றுமுள்ள அரசாங்கபகுதிகளின் கிளைக்கந்தோர்களிலெல்லாம் இந்தச்சிங்கள அரசாங்கஊழியர்கள் இயன்றமட்டும் அரசாங்க பாஷைக்கொள்கையை நிறைவேற்றி வருவார்களென்று தெரியவருகிறது.

## இந்திய பீடி இறக்குமதி

சமீபத்தில் நடந்தேறிய இந்திய-இலங்கை வர்த்தக உடன்படிக்கையாலே இந்தியாவிலிருந்து இலங்கை 200 கோடிபீடிகள் வாங்கவேண்டியதாகும். ஆனால், இலக்கையில் தற்போது ஏற்றுமதிசெய்வதற்குப் போதியபீடிகள் உற்பத்திசெய்யப்படுகின்றன. அதனால் இந்த வர்த்தக உடன்படிக்கையாலே பீடிக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள 15,000 பேர் வேலையின்றித் தவிப்பார்களென அரசாங்கத்துக்கு முறையீடு செய்யப்பட்டிருக்கிறது.

## சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சை

இலங்கைச் சர்வகலாசாலைப் புகுமுகப்பரீட்சை சென்றவாரம் ஆரம்பமாகியது. இவ்வாண்டிலே நானூற்றுக்குஅதிகமான பாடசாலைகளிலிருந்து சுமார் 8,800 மாணவர்கள் இப்பரீட்சை எடுக்கின்றார்கள். சென்ற 1960-ம்ஆண்டிலே 319பாடசாலைகளிலிருந்து சுமார் 5,300 மாணவர்கள் இப்பரீட்சை எடுத்தார்கள். 1962-ம் ஆண்டுமுதல் இலங்கைச் சர்வகலாசாலையிலே விஞ்ஞானம், எஞ்ஜினிய றிங்வகுப்புகள் சுயபாஷைகளில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிநாட்டுச் செய்திகள்

● சுவிற்சர்லாந்திலே லொஸான்ஸ்லே சோனியர் எனுமிடத்தில் வசிப்பவளான 64வயதுடைய லூஸி யேசெவ்றன்எனும்மாது இற்றைக்குப் பதினொரு வருடங்களின்முன் மின்னலால் தாக்குண்டு அதிர்ச்சி ஏற்பட்டதுமுதல் பிறர்இரத்தத்தினாலேயே உயிர்வாழ்ந்திருக்கின்றாள். சமீபத்திலே 258-வதுமுறையாக இவளுடைய சரீரத்தில் இரத்தஞ்செலுத்தப்பட்டுள்ளது. இரண்டுவாரங்களுக்குஒருமுறை இவளதுஉடலிலே இரத்தம்செலுத்தப்பட்டுவருகிறது.

● பிரித்தானியின் யுத்தகாலபிரதமரான பிரஸ்தாபம்பெற்ற சேர்வின்ஸ்ரன் சேர்ச்சில் தமது87-வதுபிறந்த பெருநாளாகிய சென்றவியாழக்கிழமை பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிரவேசித்தபோது சகலகட்சிகளையுமே சேர்ந்தஅங்கத்தவர்களெல்லாம் உரத்துஆர்ப்பரித்து அவருக்கு வாழ்த்துக்கூறினார்கள். 87வயதுடையவராயிருந்தும் இன்றுமே பிரித்தானிய பாராளுமன்றத்தில் இவர் தெரிவுசெய்யப்பெற்ற ஓர்அங்கத்தவராக இருந்துவருகின்றார்.

● இரண்டாவது உலகயுத்தத்தின்பின் சுதந்திரமேற்குஜேர்மனி தனது புனருத்தாரணவேலைகளுக்கென்று வெளிநாடுகளிலிருந்து பெற்றகடனிலே அரைவாசிக்குமேல் —அதாவது 792 கோடிரூபாவரை திரும்பக்கொடுத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

● பேர்லின்பிரச்சினையிலே இணக்கம் ஏற்பட்டால் அமெரிக்க-சோவியத் உறவு மேலும்அதிகரிக்குமென்றும், கிழக்குஜேர்மனியை ஓர்சுதந்திர நாடாக அமெரிக்கா அங்கீகரியாத காரணம் ஜேர்மனிபிளவுபடுவதை அது விரும்பாததேயென்றும் அமெரிக்கஜனாதிபதி கென்னடி அவர்கள் சோவியத்பிரதமர் குருஷேவின் மருகருக்கு அளித்தபேட்டிஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

## திறைசேரி வாங்கியகடன்

தற்போது கடன்பத்திரங்கள்மூலம் திறைசேரி கடன்வாங்கக்கூடிய அதிகம் கூடுதலானதொகை 75கோடிரூபாவாகும். இந்தத்தொகை முழுவதும சென்றபுரட்டாசிமாதம் 29-ந்திகதியோடு கடன்வாங்கப்படலாயிற்று. அதனால் இப்போதைய செலவுகளுக்குக் கடன்பத்திரங்கள்மூலம் மேற்கொண்டு திறைசேரியால் கடன்பெற முடியாதிருக்கிறது. ஆகவே, அவைகள்மூலம அது பெறக்கூடியதொகையை மேலும 25கோடிரூபாவால் அதிகரிக்கச்செய்வதுபற்றித் தற்போது அரசாங்கம ஆலோசனைசெய்து வருகிறது.

## வெள்ளைச்சீனி விலை

வெள்ளைச்சீனியின்விலை சென்றசெவ்வாய்முதல் றாத்தல் 67சதத்திலிருந்து 62சதமாக ஐந்துசதத்தாலே குறைக்கப்பட்டுள்ளது. இதன்விளைவாக இந்த நிதிவருடத்திலே சீனியிலிருந்து அரசாங்கத்துக்குக்கிடைக்கும் இலாபத்தில் 1 கோடியே 70இலட்சம்ரூபா குறையுமென மதிப்பிடப்படுகிறது.

## சாராயவிற்பனைக் கடைகள்

'கசிப்பு'என்ற கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கான மற்றோர்நடவடிக்கையாய்ச் சாராயத்தவறணைகள் இல்லாத பகுதிகளில் சாராயம்விற்பதற்கென்று விசேட கடைகளைத்திறக்கப் 'பெர்மிற்' வழங்கும்யோசனையை உள்நாட்டுமந்திரி காரியாலயம் ஆதரிக்கின்றது. அரசாங்கமும் இதனை ஆதரிக்குமானால் சாராயத்தவறணைகளோ, பார்களோ இல்லாதபகுதிகளில் சாராயம்விற்கப் பெர்மிற்கள் வழங்கப்பட்டுச் சாராய விற்பனைக் கடைகள்திறக்கப்படுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### மார்கழி மாதம் — 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | ஞா | 1 | ஆகமன காலத்தின் 2-ம்ஞாயிறு (வி. ம) | ஊ. |
| 11 | தி | | அர்ச். தாமசுஸ் (காலதின ஞா.) | வெ. |
| 12 | செ | | காலதினம் (ஞாயிறு பூசை) | ஊ. |
| 13 | பு | | அர்ச். ஆசியம்மாள் (காலதின ஞா.) | சி. |
| 14 | வி | | காலதினம் (ஞாயிறு பூசை) | ஊ. |
| 15 | வெ | | காலதினம் (ஞாயிறு பூசை) (கொழும்பு அதிமேற்றிராணியாருக்காகச் செபம்) | ஊ. |
| 16 | சனி | | அர்ச். எயுசேபியார் (காலதின ஞா.) | சி. |

சத்திய வேத
பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
மார்கழி மாதம் 9 -ந்திகதி

## தேசீய கல்வித்திட்டம்

"கல்விப்பகுதியின் திட்டம் எதுவாயிருந்தபோதிலும், நாட்டின் பொருளாதாரநிலை என்னவாயிருந்தபோதிலும் சனப்பெருக்கத்தை எவருமேஒருபோதும் தடுத்துநிறுத்த முடியாது; ஆகவே,பாடசாலைகளின் கடமை,எதிர்காலசந்ததிகள்பிழைப்புக்கண்டுகொள்ள உதவக்கூடியமாதிரியான கல்வியை அருளுவதே" என்று உபவித்தியாதிபதிகளில்ஒருவர் உரைத்திருப்பது ஆழ்ந்துயோசிக்கத் தக்கதாகும். இதனையே தனது ஏகஇலட்சியமாகக்கொண்டு, இடையூறுவிளைக்கும் பிறதுறைகளில்இறங்காது கல்விப்பகுதி தனது தேசியகல்வித்திட்டத்தை வகுத்து நடத்துமானால் அது எல்லோரதும் ஒத்துழைப்பைப்பெற்று, எதிர்பாராத கூடியவிருத்தியடைந்து, எதிர்பார்ப்பதிலும் குறுகியகாலத்திலே சிறந்தபலனை அளிப்பதாயிருக்கும். ஆனால், தேசியகல்வித்திட்டம் ஒன்றைவகுக்க அரசாங்கம் என்று முனைந்ததோ, அதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகளில் என்று இறங்கியதோ அன்றுமுதல் எத்தனையோ ஆசிரியர், மாணவர், பெற்ருேர், மற்றேனையோர் மத்தியிலே அமைதியைக் கண்டுகொள்வது அரிதாயிருக்கிறது.

கல்விமந்திரியும், கல்விப்பகுதி அதிகாரிகளும் செய்துள்ள சமீபகால தீர்மானங்கள்சில நாட்டில் கலக்கத்தையும், கவலையையும் உண்டு பண்ணியிருப்பதாகத் தெரிகிறது. தற்போதைய கல்விமந்திரிக்குப் போன்று இப்போதைய மந்திரிசபையிலே மற்றெந்தமந்திரிக்கும் கண்டனமாலைகள் விழுவதில்லை. தனது சொந்த முஸ்லீம்சமூகத்திலிருந்தும், பிறசமூகங்களிலிருந்தும் அவர்செயல்களையிட்டுக் கண்டனக்குரல்களும், முறையீடுகளும் எழாதநாளே இல்லையெனலாம். கொழும்பிலுள்ள சஹிராக்கல்லூரியை அரசாங்கம் எடுத்ததையிட்டும், கம்பளையிலும், அதன்சுற்றுடல்களிலுமுள்ள வளர்ந்த முஸ்லீம்பெண்பிள்ளைகள் இதுவரை தாங்கள்படித்துவந்த தனிப்பெண்பாடசாலைகளிலிருந்து ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் கலந்துபடித்துவரும் பாடசாலைகளில் வேணும்வேண்டாம்சேர்ந்து படிக்கப் பலவந்தப்படுத்தும் வழிவகைசெய்யப் பட்டிருப்பதையிட்டும், தலைமுறை தலைமுறையாக உயர்தர சமயஸ்தாபனபாடசாலைகளில் பயின்றுவந்த தங்கள்பிள்ளைகளை இப்போது அவற்றிலே சேர்த்துக்கொள்ளவியலாத கஷ்டநிலைமை ஏற்பட்டிருப்பதையிட்டும் முஸ்லீம் சமூகத்தில் ஒருபெரும்பகுதி அவர்மேல் குரோதம் பாராட்டுவதாகச் சொல்லப்படுகிறது.

கல்விமந்திரியின் விபரீதபோக்கைக் கவனித்துப்போலும் நாட்டிலே செல்வாக்குடைய திரு. பிலிப் குணவர்த்தனு, திரு.லக்ஸ்மன் இராசபக்சிபோன்ருர் சிறந்தகல்விமந்திரி வேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர். நமதுகல்விவிஷயங்களில் ஏற்கனவே தாறுமாறுகளுக்கு வழிகண்டுள்ளநிலைமைகளைத் தடுத்துநிறுத்தக் காலந்தாழாது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பிரதமருக்கு வேண்டுகோள்களும் விடுக்கப்பட்டுள்ளன. எல்லாருக்கும் சமநீதிநியாயமும், சமசந்தர்ப்பமும் வழங்கப்படுமென்று பிரசித்தமாக வாக்குறுதிபகர்கின்ற கல்விமந்திரி பெரும்பான்மைச் சமூகத்தினருக்குக் 'கூடியசேவை'யென்றும், சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்குக் 'குறைந்த சிறுசேவை'யென்றும், உண்மையான தேசியக்கல்வி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை; ஆனால், புதியகல்வித்திட்டத்தின்கீழ் சிங்கள ஆசிரியர்களுக்கும், புத்தபிக்குகளுக்கும் வேலைநிச்சயமென்றும் பகிரங்கமாக அறிக்கையிடுவதிலிருந்து ஜனநாயகநாடொன்றிலே மந்திரிஒருவர் எவ்வாறு நடந்துகொள்ளுகிறார்என்பது தெளிவாகிறதுஅன்றோ! இன்றுள்ள பெரும்பான்மையான கல்விப்பிரச்சினைகளுக்கு அதிகம்இலேசான பதில்களே இருக்கின்றன; இந்தப்பதில்களைத் தன்னால் நேர்முகமாக அளிக்கமுடியும்; பதிலளிக்க முடியாதுவிடப்பட்டுள்ள சிலபிரச்சினைகளையும் தற்போது ஆலோசனை நடத்துகின்ற கல்விக்கமிஷன் தனது ஈறுந்தஅறிக்கையை முடித்ததும் தன்னால் தீர்க்கமுடியுமென்று கல்விமந்திரி பகரும்போது, ஏலவே தேசிய கல்வித்திட்டம் என்னவாயிருக்குமென்பதை அவர் நன்கறிந்துள்ளார் போலும்.

தமிழும்,சிங்களமுமாகிய தேசிய மொழிகள் இரண்டுமே பாடசாலைகளில் கட்டாயபாட மாக்கப்படுவது நாட்டின் ஐக்கியத்திற்கும், ஜனநாயக ஆட்சிமுறைக்கும் உகந்ததாகும். அங்ஙனமாக, அரசாங்ககருமமொழியாகிய சிங்களத்தைச் சகலபாடசாலைகளிலும் கட்டாயபாடமாக்க வேண்டுமென்று தேசியகல்விக்கமிஷன் சிபாரிசுசெய்துள்ளது. இந்தச் சிபாரிசு இலங்கைவாழ் சகலசாகியத்தினருக்கும் உடன்பாடாகுமா? தங்கள்பகுதியிலுள்ள பாடசாலைகளிலேயே. பிள்ளைகள்சேரவேண்டுமென்ற கல்விமந்திரியின் பாடசாலைப்பிரவேச கட்டுப்பாட்டாலே தங்கள்பிள்ளைகளுக்குத் தங்கள்இட்டப்படி பாடசாலையைத் தெரிவுசெய்யும் உரிமையும், தங்கள்பிள்ளைகளுக்குச் சிறந்ததென்று தாங்கள்கருதுகின்ற கல்வியைப்போதிக்கும் உரிமையும் மறுக்கப்பட்டிருப்பதால் அநேக பெற்ருர் மனமுடைந்திருக்கின்றனர். தனது இடைக்கால அறிக்கையிலே சிங்களத்தைச் சகலபாடசாலைகளிலும் கட்டாயபாடமாக்க வேண்டுமென்று சிபாரிசுசெய்துள்ள தேசியகல்விக்கமிஷனின் ஈறுந்த அறிக்கையிலும் ஏதேதுகிருத்திரமங்கள் அடங்கியிருக்குமோவென்று தான் சிந்திக்கவேண்டியிருக்கிறது. வரிப்பளுவாலும், ஏற்றுமதிப்பொருட்களின் வருமானக்குறைவாலும், வாழ்க்கைச்செலவின் உயர்வாலும், வேலையில்லாத்திண்டாட்டத்தாலும் கதிகலங்கிக் கொண்டிருக்கின்ற மக்களுக்குக் கல்விக்கமிஷனின் அறிக்கையும் ஏதேதுகலக்கத்தை உண்டுபண்ணுமா தெரியவில்லை.

## ஆகமனகாலத்தின் 2-ம் ஞாயிறு

— வண. மைக்கல் ரொட்ரிக்கோ சுவாமிகள் —

தமிழாக்கம்: தமிழ்க் கழகம், லங்காமாதா குருமடம், கண்டி.

**பூசையின் சாரம்:** வாரும் யேசுவே! ஏழைகள், யூதர், பிறமதத்தவர்கள், உலக மக்களினதும் இரட்சகரே! வாரும்.

**சபைச்செபம்:** சபைச்செபத்தில் எம்பிதாவைத் தேவனே! என்று அழைத்து அவரது திருக்குமாரனின் வருகையின் மூலம் நாம் சுத்தமான மனதுடன் அவருக்குச் சேவை செய்யத் தகுதி உள்ளவர்களாகும்படி அவருடைய பாதையை ஆயத்தப்படுத்த எங்களுடைய இருதயங்களைத் தூண்டியருளும்படி சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற கடவுளிடம் வேண்டுகின்ருேம்.

**சுவிசேஷம்:** அர்ச். மத்தேயு 11-ம் அதி. 2—10 வசனங்களில்எழுதிவைத்தபடி.

**விளக்கம்:** சென்றவாரச் சுவிசேஷம் உலகமுடிவை அடுத்துவரும் அறிகுறிகளைக் கூறியது. போர்களுடனும், போர்ச்செய்திகளுடனும், கிரேசிமாவில் விழுந்த குண்டிலும் 2,500 தரம் வலுவுள்ள ஐம்பது "மெகட்டன்" குண்டைப்பற்றிய செய்தியுடனும் மனிதனின் கெட்ட சித்தம் என்னென்ன செய்யக்கூடும் என்பதைச் சற்றே அறிந்துகொள்ளலாம். இயற்கையின் சூழ்நிலையைக் கெடுத்தல் ஒன்று. மனோதத்துவத்தினதும் ஞானத்தினதும சூழ்நிலைக்குத் தேவனையும் அவர் அன்பையும் வெறுத்துச் சில தலைவர்கள் செய்வதுபோலக் கெடுதி வருவிப்பது மட்டாமட்டித்தனமும், கெட்ட சித்தத்தின் தாண்டவத்திற்கு அத்தாட்சியுமாக இருக்கின்றது. "பூமியிலே நன்மனதுள்ளவர்கள், தேவனின் இன்பத்திற்குரியவர்களுக்குச் சமாதானம்" இதுதான் உண்மையான நத்தால்செய்தி. இன்றைய சுவிசேஷம் கலிலேயாவில் கிறிஸ்துநாதரின் நாட்டங்களைப்பற்றி அருளப்பருக்கு எப்படி வார்த்தைகிடைத்தது என்பதைக் கூறுகிறது. அருளப்பர் கிறிஸ்துவே வரவிருந்தவர்—மெசியா என்று தெரிந்திருந்தார். எனினும் தமது சீடர்களுடைய அறிவிற்காக அவர்களை அவரிடம் அனுப்புகிருர். யேசுவும் அருளப்பருடைய எண்ணத்தை அறிந்தவராய் அவர்கள் கண்டதையும், கேட்டதையும் அருளப்பருக்குக் கூறுமாறு கேட்கிருர். அருளப்பருடைய ஐமிச்சம், அப்படி ஏதும் இருந்திருந்தால், இதன்பின் அழிந்துபோகிறது. நல்மனமுள்ளவர்களுக்குக் கிறிஸ்துநாதரின் இவ்வேலைகள் துன்மாதிரிகையாக இருக்கமாட்டா. நமதாண்டவர் அருளப்பரை அவர் பரிசுத்தவான் என்பதைப்பார்க்க அவர் யேசுவின் முன்னோடியாகக் கடவுளின் திட்டத்தில் முக்கிய இடம் எடுத்தமைக்காகவே கூடுதலாகப் புகழ்ந்து பேசுகிருர். மற்ற எல்லாத் தீர்க்கதரிசிகளும் யேசுவைத் தீர்க்கதரிசனத்திலே கண்டிருக்க, அருளப்பரோ கிறிஸ்துவைத் தன் கைவிரலால் சுட்டிக்காட்டினுர்.

**செபமும் போதகச் சடங்கும்:** பிரவேசவாக்கியம் (இசை. 30; 79-ம் சங்.) கிறிஸ்துநாதரின் வருகையைச் சுட்டிக்காட்டுகின்றது. "நாடுகள்" எனப் பன்மையில் அங்கு வரும் சொல்லானது இரட்சணியம் ஒவ்வொருவருக்கும் உரியதேஎன்பதை விளக்கி நிற்கிறது.

**நிருபம்:** இதை மேலும் துலக்குவதைக் காண்கிருேம். பாவுலு அப்போஸ்தலர் யூதசாதியினரையும் பிறசாதினரையும் ஒன்ருகப் பாவித்து, அவர்கள் எல்லோரையும் சகோதரர்களைக் கிறிஸ்துமயமான பட்சத்துடன் பாவித்து ஒரேமனதுள்ளவர்களாய் இருக்கும்படி வேண்டுகிருர். "சகல பிறசாதி மக்களே தேவனைப் போற்றுங்கள் என்பதே இந்நிருபத்தின் சாரம். விசுவாசமந்திரத்தைச் சொல்லி சீவியத்திலும், செய்கைகளிலும் எமது விசுவாசம் தூய்மையாக்கப்பட்டு ஸ்திரப்படுத்தப்படவேண்டுமென்று நாம் மன்ருடுவோமாக.

**நற்கருணைச் சடங்கு:** தேவனின் அணைகடந்த இரக்கம் எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவேண்டுமென்று ஆசிக்கிறது. அவர் தேவனுக இருந்தும் யெருசலேமில் மனிதனுக வந்தார்; இனியும் வருவார். இந்த இரக்கமே நாம் காணிக்கை வாக்கியத்தில் "உமது சகாயத்தைக் காட்டு" மென்று வேண்டுவதற்கும் ஏகாந்த செபத்தில் "உமது சகாயத்துடன் எம் காணிக்கைகள்மேற் கண்கூரும்" என்று கேட்பதற்கும் காரணமாக இருக்கின்றது.

இன்று நான் எழுந்தேற்றத்தின்பின் எனக்குத்தானே அவரை வைத்திருந்து, எல்லோருடனும் பந்தியில் அமருமுன், உலகத்தின் எல்லாச்சாதி சனங்களுக்கு மாத்திரமல்ல, உலகில் ஒரு மூலையில்கிடக்கும் ஏழையாகிய எனக்கும் தேவனும் இரட்சகருமாயிருக்கும்படி கேட்கவேண்டும். ஆனால், ஒன்று அவர் என்னைச் சிருட்டித்து, எனது பெயரையும் அறிந்திருக்கிருர். எனது அனுபவிப்பின்போது நான் அவரையும் அவருடன் சேர்ந்தோர் எல்லோரையும் சந்திப்பேன். அனுபவித்தபின் இந்த ஞான உணவில் பங்குபற்றினதினுல் உலக பொருட்களை அரோசித்துப் பரலோக காரியங்களையே விரும்பித் தேட எங்களுக்குப் படிப்பித்தருள வேண்டுமென்று பன்மையில் அவரை வேண்டுவது இலேசானதே. ஓ! ஆசீர்வதிக்கப்பட்ட தரிசனமே உம்மை நாம் காத்திருக்கிருேம், வாரும்.

### அன்புக்கன்பு

பரிசுத்த தந்தை துன்புறுத்தப்பட்ட யூதமக்களுக்குச்செய்த அன்பிற்குப் பதில் அன்பாக, யூதர் ஒருவர் வெள்ளிக் கம்பியாலும் முத்து மணியினுலும் செய்யப்பட்ட செபமாலை ஒன்றைப் பாண்பரி நகரிலுள்ள பரிசுத்த அருளப்பர் ஆலய கிறிஸ்மஸ்விழாச் சிறப்பிற்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்.

### 3 குருமாருக்குச் சிறைத்தண்டனை

ஹங்கேரி நாட்டில் 3குருமார் சிறைத்தண்டனை பெற்றிருப்பதாக வீயன்னுவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. கோடு இரகசிய விசாரணையின்பின் வண. ஒல்மர் றெட்லி(27) சுவாமியை நாலு வருடத்துக்கும், வண. இம்றேநாகி(26) கேசாகுரேட்கோ(27) 2வருடத்துக்கும் சிறைத்தண்டனை விதித்திருக்கிறது. எல்லாமாக 64 குருமார் ஹங்கேரிய சிறையிலிருக்கிருர்கள்.

மனச்சஞ்சலத்திற்கு இடங்கொடாதே. ஏனெனில், மனஅமைதியில்லாவிடில் நீ சர்வேசுரனேடு பேசமாட்டாய். நம்பிக்கையும் தளர்வடையும். நீ தேவ ஊழியத்தில் குளிர்ந்தவனுய் அசமந்தமுள்ளவனுய்ப் போகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரணம் கூறும் அணங்கு

[எழிலி]

யுக யுகாந்தரத்துக்கு முற்பட்ட — மனிதனின் மனதுக்கு எட்டாத —காலம்! விண், மண் என்ற பிரிவினை அப்போது இல்லை. கொஞ்சம் எழில் சிந்தும் இயற்கையும், நெஞ்சை அள்ளும் அதன் காட்சிகளும் இருக்கவே இல்லை. பசுமைஉமிழும் வயல்வெளிகளும், பார்ப்போர்மகிழும் சமவெளிகளும் இவ்வுலகில் ஏற்படாத காலம் அது! இதுமட்டுமா?

பனிமயமான மலைச் சிகரங்களும், அணியணியான மரச் செறிவுகளும் இல்லை. சாந்த சமுத்திரமும், ஆழ்ந்த சமுத்திரமும் அன்று இல்லை. நெடுங்கடலும், நீர்நிலைகளும் நிலைபெற்றிருக்கவில்லை. தண்மை தவழும் பூங்காவும், இன்பம் கொழிக்கும் இளங்காவும் இல்லை. மலர்ச்சோலைக் குயிலும், மதுமொழிக் கிளியும், கோலவண்ண மயிலும் எங்கோ இருந்தன. மாந்தளிரும், மந்தமாருதமும் மக்களை மயக்கக் கற்காத காலம் அது!

பூமியின் மீதுள்ள பொருட்களைத் தனது உதய கதிர்களாலும், செல் கதிர்களாலும், பொன்மூலாம் பூசி, ரசவாத வித்தை செய்யும் செங்கதிர்ச் செல்வன் அன்று இல்லவேயில்லை. மண்மகள்மீது தண்ணிலவு பொழியும் வெண்மதி விண்ணில் உண்டாகவில்லை. விண்மகள் அணியும் நீலப் பட்டாடையில் நித்திலங்களை ஒத்திலங்கும் வான் மீன் கூட்டங்கள் வெளிப்படவேயில்லை. வனசரமும், திண்தோளும் வந்துநிற்கவில்லை. மாண்விழியும், தேன்மொழியும் மனதைக் கவரவில்லை. மழலைச் சொல்லும், குதலைக்குறும்பும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளவில்லை!

இத்தகைய காலத்தில்தான் சர்வ பூதாந்த, வேதாந்த, தியானயோக சித்தாந்த — இன்னும் எத்தனையோ அந்தங்களைத் தாண்டிய பல நிலைகளையுடைய காதங்களுக்கு அப்பாலுள்ள அகன்ற ஞானவெளி என்னும் மோன வெளியில், ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்தி, யாதொருகவலையும், கட்டுப்பாடும் இன்றி இன்பவெள்ளத்தில் திளைத்திருந்தார் ஒருவர்! அவர்தான் மேலே குறித்துள்ள அத்தனை பொருட்களையும் தன் உள் அடக்கிக்கொண்டு "சூன்யம்" என்ற நிலையில் இவ்வுலகத்தையும், இன்னும் மற்றப் பொருட்களையும் விட்டுவைத்திருந்தார்.

அவருடைய உருவம் இன்னதுதான் என்று இன்னும் ஒருவருக்கும் தெரியாது. அவர் பெயர் என்னவென்றும் இன்றளவும் தெரியாது. அண்டத்தையும் வெற்றிபெற முடிப்பவர் என்னும் பொருளில் அவரை 'ஜெகோவா' என்றனர் குறிப்பிட்ட ஒரு குலத்தார். சர்வத்துக்கும் காரணகர்த்தர் என்னும் பொருட்படச் 'சர்வேசுரன்' என்றனர் பலர். (சர்வம் = அனைத்துக்கும் ஈசுவரன் = தலைவன்) கடவுள் என்று அழைத்தனர் அநேகர். ஏனெனில், அவர் மக்களது ஆசைக்கும், அபிமானத்துக்கும் கட்டுப்படாதவர். எத்தகைய மனித சக்தியும் அவரை வசப்படுத்த முடியாது. அவர் யாவற்றையும் கடந்தவர் அப்படிக் கடந்து எட்டாத நின்றபோதிலும் ஒவ்வொரு அணுவின் உள்ளிருந்தும் அதனை இயக்குபவர். இத்தன்மையின் உயர்வுகருதி, "அவன் இன்றி அணுவும் அசையாது" என்ற உண்மையைத் தங்கள் உயிரோடு கலந்துகொண்டார்கள் அந்த மக்கள். இதனால் 'அவன்' என்னும் சுட்டுப் பெயரில் சிறப்பாகச் சுட்டப்படும் அவனே — அனைத்தையும் கடந்துநின்று அதே சமயத்தில் ஒவ்வொரு பொருளின் உள்ளிருந்தும் இயக்கும் அவனைக் — கடவுள் என்னும் பொதுப்பெயரால் அழைத்தனர் — (கட = அனைத்தையும் மேற்கொண்ட, கடந்துநின்ற உள் = உள்ளிருந்து இயக்கும் ஒப்பற்ற வ் = உடம்படுமெய்). அதாவது, பரம் பொருள், ஒப்பற்ற பொருள், உயர்ந்த பொருள், மூலப்பொருள் மறுமைக்குரிய பொருள் என்னும் பல சொற்கள் ஒரு பொருளைக் குறிக்கும் "ஒரு பொருட் பன்மொழி" யால் அழைத்தனர்.

அவர் கவிகளின் கற்பனைக்கு எட்டாதவர். காரிகைகளின் கண்ணம்புக்கு இலக்காகாதவர். குழலினும் இனிய மழலைச் சொற்களில் மனதைப் பறிகொடுக்காதவர். ஒரே வார்த்தையில் கூறவேண்டுமானால், மாந்தரின் மனோ வாக்குக்கு எட்டாதவராய், தானாய், தனியராய், ஆதி அந்தமில்லாதவராய், சகல நன்மைச் சுரூபியாய், எங்கும் நிறைந்தவராய், யாவற்றுக்கும் ஆதி காரணமாய், 'பார்க்கும் இடமெங்கும் ஒரு நீக்கமற' எங்கும் நிறைந்திருப்பவர்!

அவரை நேருக்குநேராய்ப் பார்த்தவர் ஒருவருமில்லை. அவர் மக்களது ஊனக் கண்ணுக்குப் புலப்படார். பிறகு அவரை எப்படித்தான் பார்ப்பது? என்றால், அகக்கண்ணால், ஞானக் கண்ணால், விசுவாசக் கண்ணால்தான் பார்க்கமுடியும்! எப்படி?

இந்திரபோகம், சுவர்க்கபோகம் என்றெல்லாம் சொல்லுகிறார்களே, அதையெல்லாம் விரும்பாதவர்கள் பார்க்கலாம். பின் பூலோகத்தில் உள்ள, பூவைப்போல் அழியக்கூடிய, இம்மண்ணுலகப் பொருட்களின்மீது பற்றற்றவர் காணலாம். அன்ன நடை மாதரின் ஆசையை அகற்றியவர் அடையலாம் அவர் தரிசனத்தை! குறுநடைக் குதலையர்மீது வைத்துள்ள மறுவறு பற்றையும் நீக்கியவர் காணலாம். எத்தகைய உயர்ந்த பொருளையும் அலட்சியத்துடன் நீக்கியவர் அடையலாம். இவைகளுக்கெல்லாம் மகுடம் சூட்டுவதுபோல் 'தான்' என்னும் அகப்பற்றையும், 'தனது' என்னும் புறப்பற்றையும் நீக்கி, தன்னையே மறந்துவிட்டு, தவநிலைதாங்கித் தத்துவ ஞானம் முற்றிய சூழ்நிலையில் யோகத்தில் ஈடுபட்டு இறைவழிபாடு இயற்றி மெய்நிலை உணர்ந்த ஞானியரே தம் ஆன்மீக வாழ்வின் அடித்தலத்தில் இருந்து அதன் முடித்தலமான அந்த இறைவனைக் காணமுடியும்! ஆம்:

**"வானத்தில் மண்ணில் பெண்ணில்**
**மைந்தரில் பொருளில் ஆசை**
**தானற்று தமையும் நீத்துத்**
**தத்துவம் உணர்ந்த யோகர்**
**ஞானக்கண் கொண்டே யன்றி**
**நாடருஞ் ஜோதி"—அவர்!**

இத்தகைய அருட்ஜோதி வள்ளல், புவனங்கள் கடந்துநின்ற அவர், தமது ஆனந்த, ஞான, உண்மை வடிவில் உள்ளிறங்கி ஊன்றித்தியானித்தவேளையில், அந்த உயிர்த்தியானத்தின் உருவமாய்—அவரது ஆழ்ந்த அன்பலைகளின் ஓசை முழக்கம் தோற்றுவித்த எதிரொலியாய் — அவரது இதய இழைகளில் எழுதப்பட்ட உயிரோவியமாய் ஒரு கன்னிகை தோன்றினாள். அவள் அவருடைய சகல நன்மைத்தனத்தின் பிரதிபிம்பமாய், சர்வ ஞானத்தின் பூரணியாய், அருள்நிறைந்த புண்ணிய முதல்வியாய் விளங்கினாள். பிற்காலத்தில் தனது திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தத் தோன்றியிருக்கும் இவளைக் குறிப்பிட்ட அந்த நன்னாள் வரும்வரை தனது கருத்தில் இருத்தியிருந்தார் இறைவன். இதன் பிறகு தான் நாம் வாழும் இம்மண்ணுலகத்தையும், காணும் விண்ணுலகத்தையும் படைத்தார். இந்நிலையைக் குறித்து அந்த அழகிய கன்னிகையே கூறும் மொழிகளைக்கேட்போம்:

"ஆண்டவர் தமது வழிகளின் துவக்கத்திலேயே, ஆதியில் யாதொன்றையும் உண்டாக்குமுன்னரே என்னைச் சுதந்தரித்திருந்தார். பூர்வங்களில், பூமி உண்டாகுமுன்னமே நித்தியந் தொட்டு நான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறேன். பாதாளங்கள் இன்னும் இருக்கவில்லை; நான் ஏற்கனவே கருத்தரிக்கப்பட்டிருந்தேன். நீர்ஊற்றுகள் இன்னமும் புறப்படவில்லை; பாரச் சுமையுள்ள பர்வதங்களும் இன்னும் உண்டாகவில்லை; குன்றுகளுக்கும் முன்னமே நான் பிறப்பிக்கப்பட்டிருந்தேன். பூலோகத்தையும், நதிகளையும், பூச்சக்கரத்தின் துருவங்களையும் தேவன் இன்னமும் உண்டாக்கவில்லை; அவர் வான்மண்டலங்களை ஆயத்தம் செய்கையில் நான் உடனிருந்தேன். அவர் நிச்சயமான சட்டத்தாலும், வட்டத்தாலும் பாதாளங்களைச் சுற்றி அடைக்கும்போதும், மேலே ஆகாயத்தை உறுதிப்படுத்தி, நீர்ச்சுனைகளை நிலையாகவும், நிறையாகவும் நிறுத்தி வைக்கும்போதும், சமுத்திரத்துக்கு எல்லையைக் கட்டி, அது தன் எல்லையைக் கடக்காதபடி ஜலத்துக்குச் சட்டத்தை அமைக்கும்போதும், பூமியின் அஸ்திவாரங்களை நிறுத்திடும்போதும் நான் அவரோடுதானே சகலத்தையும் சீர்ப்படுத்தி வைத்துக்கொண்டிருந்தேன். தினந்தோறும் சம்பாஷித்துக்கொண்டு, எக்காலத்தும் அவர் முன்பாக விளையாடிக்கொண்டும், சகல உலகத்திலும் விளையாடிக்கொண்டும் இருந்தேன்" — இதுவே பழமொழி ஆகமம் அழகிய மொழியால் அவ்வழகியின் புகழை இசைக்கும் பகுதி.

இத்தகைய பன்னலமும் உன்னத நிலையில் பெற்றுவிளங்கிய அந்தமாதரசி இவ்வுலகில் தோன்றுதற்குரிய வழிவகைகளாகப் படைப்புப்பொருட்களைப் படிப்படியாய் அமைத்தார் பரமன். இவைகளை எல்லாம் தமது வார்த்தையால் உண்டாக்கினர். இந்தத் தேவ வார்த்தைதான் பிற்காலத்தில் மனித உருவெடுத்து, கடவுட் தன்மை — தெய்வீகம் கெடாமல், தெய்வீகமும், மனுஷீகமும் ஒன்றித்த தேவ மனிதனாய் அந்தக் கன்னியின் வயிற்றில் உற்பவிக்கக் கடவுள் நித்தியமாய் நியமித்திருந்தார். இவ்வுயர்ந்த பதவியை—உன்னத நிலையை—தேவ வார்த்தையைத் தாங்கியிருக்கும் ஒப்பற்ற அலுவலை—அவள் ஏற்றுக்கொள்வதற்குக் காரணமான சிருஷ்டிகள் ஒன்றன்பின்ஒன்றாய் உண்டாக்கப்பட்டன.

கடவுள் தமது படைப்பின் முதற்கனிகளாகத் — தமக்குத் தொண்டுபுரியும் தூதர்களாக — தமது இயல்புக்கு ஏற்றவண்ணம் அரூபிகளை உண்டாக்கினார். அவர்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியார் தமது அகங்காரத்தால் அவருக்குப் 'பணிபுரியோம்'என்று புரட்சி செய்து எதிர்த்தார்கள். அவர்களை— அந்தக் கெட்ட அரூபிகளை என்றும் அழியாத கொடூர நரகநெருப்பை உண்டாக்கி அதில் தள்ளினார். முதற் படைப்புகளிலேயே அவருக்கு எதிர்ப்பு! அடுத்தபடியாக அந்தஅரூபிகளிலும் மட்டரகமான, அதாவது மாமிசத்தோடு கூடிய — ஊனுடல் எடுத்துலவும் ரூபிகளாக மக்களை உண்டாக்கினார். முதலில் ஆணையும், பிறகு அவனுக்குத் துணையாகப் பெண்ணையும் படைத்தார் பரமன். படைத்துப் பலவளமும் கொழிக்கும் பழமுதிர் சோலையின்கண் இருத்தி, பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பப் பணித்தார் தேவன். எனினும், அவர்களிடம் ஆழ்ந்த அன்புண்டா என அறிய ஆசைப்பட்டார். அதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டுப் பழச்சோலையின் நடுவண்நின்றிருந்த 'நன்று தீதறி' தருவின் கனியைமட்டும் உண்ணவேண்டாம் என விலக்கியிருந்தார். அதன் விளைவையும்விளக்கியிருந்தார். ஆனால், நடந்தது என்ன? ......

கெட்டஅரூபியின் கொட்டம்அடங்கக் கொடுநரகில் வீழ்த்தப்பட்டாலும் அது தனது கெட்டகுணத்தை விட்டுவிடவில்லை. நிமிர்ந்த நிலையில், அன்றுலவிக்கொண்டிருந்த சர்ப்பத்தின் வடிவில், விலக்கப்பட்ட மரத்தின் கொம்பில்ஏறிக் கொம்பேறிமூக்கனாக வம்புசெய்தது ஏவையிடம்.

அவள் பாம்பின் பசப்புவார்த்தைகளில் மயங்கினாள்—விலக்கப்பட்ட கனியைத் தின்றாள். தன் கணவனுக்கும் கொண்டுவந்து கொடுத்தாள். அவனும்அதைத்தின்றான். அதன் விளைவு? ......

அதன்பிறகு, அந்த மானிடரின் மீதுள்ள இரக்கத்தால் (என்ன இருந்தாலும் மனிதர்கள் தானே!) ஓர் இரட்சகரை அனுப்புவதாகவும் வாக்களித்தார். பின் அவர்களை அங்கிருந்தும் அகற்றினார். அவர்கள் மறந்தும் அங்கு வந்துவிடாதபடி, அக்கினி வாளையுடைய ஒரு தேவதூதனை, அவ்வனத்துக்குக் காவல் வைத்தார்! எத்தகைய சோக நிகழ்ச்சி!

இவ்வாறு, பெண்ணில் தன்னை மறந்து, பேரின்ப நிலையை இழந்து, தன் பின்னோர்க்குப் பெருந்தீங்கு தேடிக்கொண்டான் ஆண் மகன்! அன்று பெண்மைக்கு அடிபணிந்து—

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

## சிந்தனைக் கதிர்

—9—

நாளை எட்டுமணிக்குச் சந்திக்கிறேம்என நண்பரொருவருக்குச் சொல்கிறோம். ஆயின், நாளையோ? எட்டு...... ஒன்பது...... பத்து மணியாகியும் நண்பர் காத்திருக்கிறார். நாம்தான் போகவில்லை. இது தவறு. இச்செயலால் நமது நேரம்மட்டுமல்ல நண்பருடையதும் வீணடிக்கப் படுகின்றது. அத்துடன் எமதுநேர்மையை நண்பர் தவருகக் கணிக்கவும் இடமளிக்கின்றது.

முன்னரே செய்துகொண்ட முடிவுக்குமாருக நாம் நடந்துகொள்ளக் காரணமென்ன? எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளையிட்டு ஏற்கனவே நாம் சிந்திப்பதில்லை. நாளையநிகழ்ச்சிகளை இன்றே சிந்தித்து அலசி ஆராய்ந்து ஆயத்தம் செய்துகொண்டால் நாம் நேரந்தவற மாட்டோம்.

இவ்விதம் நேரந்தப்பாது எம்கருமங்களைச் செய்துமுடிப்பதற்குச் சிறிது பரித்தியாகம் தேவை. ஆயின், பரித்தியாகம்செய்யப் பின்வாங்கினால் நமது கடமைகளிலிருந்து தவறியவர்களாவோம். நாளடைவில் உலகத்தின்முன்னர் வெறும் நடைப்பிணங்களாகவே தோற்றமளிப்போம். இவ்விதநிலையை எம்வாழ்வில் விரும்பாதிருப்பின் சிறு பரித்தியாகங்கள்மூலம் எமது நேர்மையை நிலைநிறுத்துதற்கு நாம்அஞ்சவே கூடாது.

நேரந்தவருது நம் திட்டங்களை நடாத்துவது மற்றுமொரு கருமத்தில் எம்மை வழிநடாத்துகிறது. மற்றவர்கட்குக் கீழ்ப்படியும் நற்பழக்கத்தையும் நாம் சிறிதுசிறிதாகப் பழகிக்கொள்ளுகிறோம். சா. பெ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அன்புத் தம்பி தங்கையரே!

திருச்சபை வருடம் ஆகமனகாலத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமையுடன் ஆரம்பமாகின்றது. ஆகமனகாலம் கிறிஸ்துநாதரின் வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பிதாப்பிதாக்கள், முன்னோர்கள் ஆயத்தம்செய்ததை நினைப்பூட்டுகின்றது. நத்தார் திருநாளுக்கு முந்திய நாலுவாரங்களும் திருச்சபை எங்களை அத்திருநாளுக்கு ஆயத்தம்செய்யும்படியே ஆகமனகாலத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நீங்களும், திவ்வியபாலனின் திருநாளைக்கொண்டாட உங்கள் ஆத்துமங்களை ஆயத்தம்செய்து, அவரை உங்கள் இதயங்களில் பெற்றுக்கொள்ளுங்கள். சிறு சிறு ஒறுத்தல், செபங்களை அவருக்கு அன்புக் காணிக்கை ஆக்குங்கள்.

அன்புள்ள அண்ணா.

—※—

# அமல உற்பவி

மார்கழித்திங்கள் எட்டாம்நாள் தேவஅன்னையின் அமலஉற்பவத் தினம். தேவதாய் சருவேசுரனுலே உலகமனிதருக்குள்ளே சுதனுகிய யேசுவுக்குத் தாயாராகத் தெரிந்து கொள்ளப்பட்டாள். தேவனின் தாயாகுவதற்குச் சகல யோக்கியமும் அவளுக்களித்த தேவனை இத்தினத்தில் தோத்திரித்து நன்றிகூற வேண்டாமா? ஆதியில் ஏவாள் அடைத்த மோட்சவீடானது தேவதாயின் சம்மதத்தினுல்—யேசுவின் வரவினுல் மீண்டும்திறக்கப்பட்டது. மோட்சத்தின்வாசலாகியதேவதாய், சகல புகழ்ச்சிக்கும் உரியவளே. மோட்சவாசிகளுக்கும், மண்ணில் மேல் வதியும் மக்களுக்கும் இராக்கினியான தேவஅன்னைக்கு நரகக் கூளிகளுமே நடுநடுங்குகின்றன. தேவதாய் சென்மமாசு அணுகாது உற்பவித்தாள் என்ற உண்மையை ஒரு விசுவாச சத்தியமாக 9-ம் பத்திநாத பாப்பரசர் 1854-ம் ஆண்டிலே பகிரங்கப்படுத்தினுர். அச்சத்தியத்தை உருசுப்படுத்தி, உறுதிப்படுத்துவதுபோல் தேவஅன்னை, லூர்து பதியிலே மசபியேல்கெபியில் பெர்னதேத்எனும் சிறுமிக்குக் காட்சி கொடுத்து, அச்சிறுமி உமது பெயர் என்ன என்று கேட்டவிடத்து "அமல உற்பவம்நாமே" என்று திருவாய் மலர்ந்தருளினுள். வானத்திலே மோட்சவாசிகளும், சம்மனசுகளும் தேவஅன்னையின் புகழைப் பாடி, துதி செய்வார்கள்.

பூமியிலே தேவஅன்னையின் பக்தர்கள் வாயார அவளை வாழ்த்துவார்கள், அவளின் நாமத்தைத் துதிப்பார்கள். சென்மபாவமில்லாமல் உற்பவித்த தேவமாதாவை பாவிகளாகிய எங்களுக்காகவேண்டிக்கொள்ளுவோம். வரப்பிரசாத பூரணியான தேவதாய் வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தியாய் விளங்குகின்ருள். பாவிகளின் அடைக்கலமான தேவதாய், சிலுவையடியிலே யேசுவினுல் எமக்குத் தாயாராகக் கொடுக்கப்பட்டாள். எங்களை இரட்சிப்பதல்லாது வேறு கவலை அவளுக்கில்லை. தேவதாய்க்கு எம்மேல் இருக்கும் அன்பை எதற்கு ஒப்பிடலாம்? உலகம்முழுவதிலும் உள்ள தாய்மார்கள் எல்லோரும் தங்கள் பிள்ளைகளுக்குக் காட்டும் அன்பை ஒன்றுசேர்த்தாலும், அது தேவதாயின் அன்புக்கு ஈடாகாது. எனவே, எம்மை நேசிக்கும் தேவதாயை நாமும் நேசிப்போம். அவவுடைய மாதிரிகையைக் கண்டுபாவிப்போம். "அமலஉற்பவி, அரிய இரட்சகி, அகல ஓட்டுவாய் அலகை செய்பிணி" என்று அவளை இரந்து மன்ருடுவோமாக.

மேரி யசிந்தா.

—(※)—

# ஐஸ்வரியவானின் நன்மரணம்

1612-ம்ஆண்டுநேப்பிள்ஸ்இராச்சியத்திற்குச் சென்ற ஒரு ஐசுவரியவான் சடுதியாகஇறந்தான். உடனே அங்குள்ளவர்கள் எல்லோரும் அவனுடைய சடலத்தை அவனுடைய வீட்டிற்கு எடுத்துச்சென்றனர். அவனுடைய வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் அழுது புலம்பினுர்கள்.

சடுதியாக இறந்துகிடந்த அந்தச் சடலம் எழுந்திருந்து, "ஒரு குருவானவரைக் கூட்டிக்கொண்டு வாருங்கள், ஏனெனில், நான் என் வாழ்விலே உத்தரியமாதாவின் பேரில் வைத்திருந்த அன்பினுல் புதன்கிழமைகளில் மாமிசம் சாப்பிடுவதை விலக்கி நடந்தேன். ஆதலால் இப்போது அவள் தன் ஏககுமாரனுகிய யேசுவிடம் எனக்காக மன்ருடி, திரும்பவும் என்னை இவ்வுலகத்திற்கு அனுப்பியிருக்கிருள். ஆதலால், சீக்கிரமாய் ஒரு குருவானவரைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்" என்றது.

அங்கிருந்தவர்கள் ஓடிப்போய் இந்த அதிசயத்தைக் குருவானவருக்கு அறிவித்தனர் உடனே குருவானவர் திவ்வியநற்கருணையை எடுத்துக்கொண்டு அங்கே சென்ருர். அந்த மனிதன் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, நற்கருணை உட்கொண்டு திரும்பவும் போய்ப்படுத்துச் சடலமாகக்கிடந்தான். பின் அங்குள்ளவர்கள் எல்லோரும் அவனை நல்லடக்கம் செய்தனர்.

ஆதலால், உத்தரியத்தைப் பக்தி விசுவாசத்துடன் பெற்று, நல்லமுறையாய்ச் சீவியம்செய்பவர்களை உத்தரியமாதா ஒருபோதும் கைவிடமாட்டாள்.

எஸ். எமல்டா,
கார்மேல் பாடசாலை,
அம்பிட்டியா.

---

# சிறுவர் அறிவுச் சக்கரம்—9

முடிவு தேதி 18-12-61

—I—

1. வத்திக்கான் மாளிகையில் புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும்படி கருதினுல்மார் கூடும் இடம் யாது?

2. தமது 62—வது பிறந்த தினத்திலே பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டவர் யார்?

3. விஞ்ஞானிகளின் பாதுகாவலர் யார்?

4. அர்ச். இராயப்பரின் சகோதரன் தான் இவர்.

5. கங்கேரிய இளவரசியான அர்ச்சியசிஷ்டர் யார்?

6. அமலோற்பவ மரியநாயகி பரித்தியாகிகள் சபையை ஏற்படுத்தியவர் பெயர் என்ன?

—II—

1. பின்வருவனவற்றின் பொருள் என்ன?
(i) தலித்தாகும்மி (ii) ரபி.

2. "சிலோவே" என்பது என்ன?

3. பரிசுத்த கற்பின் அடையாளச் சின்னம் என்ன?

4. இலங்கையில், ஒல்லாந்தர் காலத்தில் தமிழிலும், சிங்களத்திலும் பாண்டித்தியம்பெற்று அநேக நூல்களை எழுதிய குருவானவர் யார்?

5. யேசுக்கிறிஸ்துநாதர் பிறந்தபோது ரோமைச் சக்கரவர்த்தியாய் இருந்தவர் யார்?

**சிறுவர் அறிவுச் சக்கரம்—9**

**பிரவேசப் பத்திரம்**

பெயர்:......................
..............................
வயது:......................
விலாசம்:..................
..............................

குறிப்பு: போட்டிக்குரிய விடைகள் யாவும் 18-12-61-க்குப் பிந்தாமல் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பப்படவேண்டும். முடிவு தேதிக்குப்பின், அல்லது பிரவேசப் பத்திரமின்றி அனுப்பப்படும் விடைகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

---


# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3548

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
சின்னக்குட்டி இளையதம்பி
— வழக்காளி

எதிராக

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
நாகரெத்தினம் கைம்பெண்
கதிரேசு நல்லையா
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் B. M. 3548-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1962-ம் ஆண்டு தை மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3,000மும், 2-8-1960 தொடக்கம் 10-11-1961 வரைக்கும் ரூபா 2,000-த்துக்கு 9 வீத வட்டியும், அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்கவேண்டும். இதில் ஏற்பட்ட செலவு 238 ரூபா 82 சதம்.

## ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் திருநெல்வேலிக் கோவிற்பற்று நல்லூர் இறை "இளகடித் தோட்டம்" என்னும் காணி. நிலப்பரப்பு 2¾. இதில் பங்குக் கிணறும். எல்லை: கிழக்கு — முருகர் சின்னத்தம்பிக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கும், மேற்கும் — ஒழுங்கை. தெற்கு — தம்புவின் மனைவி ஆச்சிக்குட்டிக்கு உரிய ஆதனம். இதில் ½ பங்கு D. 217/241 என்னும் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் திருநெல்வேலிப்பகுதி "சிதிப்புலம்" என்னும் காணி. நிலப்பரப்பு 9½ உம், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — செல்லம்மாவின் ஆதனம். வடக்கு — கதிரேசுவின் மனைவி நாகமுத்துவின் ஆதனம். மேற்கு — வீரகத்தி வேதருக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு—கந்தர் அரையப்பாவுக்குரியஆதனம். இதில் $\frac{9}{20}$ பங்கு D. 234/10 என்னும் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

3. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் தெற்குக் கோவிற்பற்று கோப்பாய் இறை "சிறன்கச்சி" என்னும் காணி. நிலப்பரப்பு 18. எல்லை: கிழக்கு—வேலுவின் மனைவி பொன்னுவின் ஆதனம். வடக்கு — வெற்றிவேலுவின் மனைவி பொன்னுவின் ஆதனம். மேற்கு — செல்லம்மாவின் ஆதனம். தெற்கு — கணபதியர் சிவகுருவின் ஆதனம். இதில் ½ பங்கு K. 95/43 என்னும் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இ. கனகரத்தினம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம்.

---

# கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M. B. 3759

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த புளியங்கூடல், காலஞ்சென்றுபோன வேலாயுதர் தம்பர் செல்லையாவினுடைய ஆதனத்தின் தத்துவகாரன், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 555-ம் இலக்கத் தத்துவ வழக்கில் நியமிக்கப்பட்ட தத்துவகாரி அவரின் பெண் செல்லம்மா
— வழக்காளி.

எதிராக

ஊர்காவற்றுறை, நாரந்தனையிலிருந்து காலஞ்சென்றுபோன சௌபாக்கிய சுந்தரம் பாலசுப்பிரமணியம் அல்லது சிவராசாவினுடைய ஆதனப் பிரதி அவரின் கைம்பெண் சூடாமணி
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3759-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகளை, 1962-ம்ஆண்டு தைமீ 20-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,963-ம், 30-11-60 தொடக்கம், 2-5-61 வரைக்கும் ரூபா 2,000-க்கு 8வீதவட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபா 289-39 சதமும்.

## ஆதன விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி, ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று, நாரந்தனைஇறை "ஆண்டைத்திடலும், அரசகுளித் திடலும்" பர. நெ. இலா. 44 நாற்பத்திநாலும், கிணறும், பனைமரங்களும், வேறு பயிர் வகைகளும். எல்லை: கிழக்கு—கந்தையா பெண் புனிதவதிக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு — சிவநாதன் பெண் சிவன்குளத்துக்குரிய ஆதனம். மேற்கு—சிதம்பரம் பெண் அன்னம்மாவுக்கும், மறுபேருக்கும்உரிய ஆதனம். தெற்கு—வேலுப்பிள்ளை பெண் சொர்ணம்மாவுக்கும் மறுபேருக்கும்உரிய ஆதனம். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் C.177/99-ம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது

2. மேற்படிஇறை "அரசகுளிக்கலடு" பர. நில. இலா. 10 பத்து. இதில் மேற்குப்பக்கமாக நில. இலா. 5 ஐந்து. இதற்கு எல்லை: கிழக்கு—பசுபதிப்பிள்ளை பெண் பொன்னச்சியின்ஆதனம். வடக்கு—மாணிக்கம் சிவராசாவின் ஆதனம். மேற்கு—சிவநாதன் பெண் சிவன்கிளத்துக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு—ஆறுமுகம்பெண்இராசம்மாவும், மறுபேருக்கும் உரியஆதனம். இவ்வாதனம். யாழ்ப்பாணம், காணிப்பதிவு கந்தோரில் D 177/100-ம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
16 A, அம்மன் ரோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் மன்றம்

# தந்தை — குடும்பத்தலைவன்

வண. ஜோர்ஜ். எல். கேன்.

நம் யேசு ஒருமுறை தனிமையான ஓர் இடத்தில் செபித்துக்கொண்டிருந்தார். உண்மையாகவே அவர் செபத்தில் ஆழ்ந்திருந்தார். ப[illegible]க்கு அவரை அணுக ஏதோ பயத்துடன் வாளாவிருந்துவிட்டது. தான் செய்வதை நன்கு அறிந்திருந்த யேசுக்கிறிஸ்துநாதர் அதைத் திருந்தச்செய்துகொண்டிருந்தார்.

அவர் அடிக்கடி செபிப்பதை அவருடைய சீடர்கள் பார்த்திருக்கிறார்கள். ஆனால், அவர்களோ செபித்ததில்லை. இம்முறை ஆண்டவர் செபிக்கிறதைக் கண்டதும் அவர்களுக்குள் ஒருபெரிய பிரச்சினை தோன்றிவிட்டது. அதைத் தீர்த்துவிடுவதற்காக, யேசுநாதர் செபத்திலிருந்து வருமட்டும் காத்திருந்தனர். அவர் செபத்தை முடித்ததும் சீடரில் ஒருவர் "ஆண்டவரே, எங்களுக்குச் செபிக்கக் கற்பித்தருளும்" என்ற பிரச்சினையைக்கூறி விட்டார். மற்றச்சீடரும் அதற்குத் தங்கள் தலையையாட்டி ஆமா போட்டனர்.

இக்கேள்வி ஆண்டவருக்கு மிக்க ஆனந்தம் அளித்தது. ஏனெனில், வழமையாக உலகத்தையடுத்த பிரச்சினைகளே அவரிடம் வந்துகுவிந்தன. ஆனால், இப்போது......

அவரும உடனே, நீங்கள் செபிக்கும்பொழுது இப்படிக் கூறுங்கள் என்று "பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே..." என்ற அரும்பெரும் செபத்தைப் படிப்பித்தார். இப்படித்தான் கடவுளைப்பிரார்த்திக்க வேண்டுமென்று மாத்திரம் அவர் படிப்பிக்கவில்லை. ஆனால், தமது பிதாவை எமது பிதாவாக்கவும், அவருடைய நன்மைத்தனத்தைப் புகழ்ந்துபாடவும், இரக்கத்தை வேண்டி நிற்கவும், நாம் அவருடைய பிள்ளைகளென்றமட்டில் அவர் எம்மை நேசிப்பதுபோல நாமும் அவரை நேசிக்கவுமே இச்செபத்தைப்படிப்பித்தருளினார். கடவுளே நம் எல்லோரையும் படைத்தார். ஆகவே, படைப்புமுறையில் நாம் அவருடைய பிள்ளைகளென்பது மறுக்கமுடியாத உண்மை. அவருடைய திருக்குமாரன் மானிடவேடம்பூண்டு நமது சகோதரனாக இம் மண்ணில் தோன்றினது இந்த உருக்கத்தை இன்னும் உறுதிப்படுத்துகிறது. அர்ச்சிக்கும் அருளை அடைந்து கடவுளின் சுபாவத்தோடு ஒன்றித்து அதன்மூலம் நாம் கடவுளின் பிள்ளைகளாகின்றோம் என்னும் உண்மையைப் பெலப்படுத்தி நிற்கிறது 'ஞானஸ்நானம்' என்னும் தேவதிரவிய அனுமானம்.

அதுமட்டுமன்று, பிள்ளைகளின் மேல் தகப்பனுக்குள்ள கரிசனையை இச்செபம் காட்டி நிற்கிறது. தன் பிள்ளைகளுக்கு நன்மையைக் கருதுவதும், அவர்களை நேசிப்பதும், பாதுகாப்பதும் ஒரு தந்தையின் சாதாரண கடமை.

திரித்துவத்தின் முதலாம் ஆளாகிய பிதாவை "எங்கள் பிதாவே" என்று அழைத்து நாம் சொந்தம் பாராட்டுகின்றோம். அப்பிதாவை அறிய மனிதத் தகப்பனிடமிருந்து கடவுளாகிய தகப்பனிடத்திற்கு எமது புத்தியைச் செலுத்தவேண்டுமென்பதற்காகவே "எங்கள் பிதாவே" என்று செபத்தை ஆரம்பித்தார். அதற்காகக் குதிரைக்குமுன் வண்டியைக் கட்டுவதா? என்ற கேள்வி நம்மிடம் உடனே தோன்றக்கூடும்? தோன்றுவிட்டாலும் அதை அவதானிக்க வேண்டும். அது ஒரு நல்லகேள்வி. ஏனெனில், கடவுள் எங்கள் பிதாவாக நித்தியத்திற்கும் இருக்கிறார். ஆனால், இவ்வுலகத்தகப்பனோ இன்று தோன்றி நாளை மறைகிறான். இப்படிப்பட்ட மனிதனிடமிருந்து கடவுளை நாம்அறியமுடியுமா? நினைக்கத்தான் முடியுமா? இதைக் குதிரைக்குமுன் வண்டி என்றால் ஏன் பொருந்தாது? இது நமக்கு விளங்கவில்லைத்தான். நமக்கு இது விளங்காது என்று அறிந்துதான் எபேசியருக்கு எழுதிய கடிதத்தில் அர்ச். சின்னப்பர்: "இது காரியத்தின் நிமித்தம் நமது ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதருடைய பிதாவின் முன்பாக நான் முழந்தாட்படியிட்டு, பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள எவ்வித பிதாத்துவ நாம காரணத்திற்கும் ஊற்றாகிய அவரிடம் பிரார்த்திக்கிறதாவது......" (எபே. 3: 14-15) என்று கூறினார்.

இன்னொரு இடத்தில் தற்கால ஞானிஒருவர், "கடவுள் ஒருநற்தந்தைபோலிருக்கவில்லை. ஆனால், ஒரு நற்தந்தை கடவுளைப்போலிருக்கிறான். தந்தை கடவுளைப்போலிருக்க வேண்டியது அவனுடைய கடமை. இவ்வுலக தந்தையின் சுபாவம் மேலோக தந்தையின் சுபாவத்தை எடுத்துக்காட்ட வேண்டியது. இதைத்தான் அர்ச். சின்னப்பரும் குறிப்பிட்டார்" என்று எழுதுகிறார்.

கிறிஸ்தவ தந்தையரே, உங்களுக்கு அருளப்பட்ட உன்னத பதவியின் மகிமையை இப்பொழுதாவது உணருகிறீர்களா? நீங்கள் உங்கள் குடும்பத்தில் எந்த இடத்தை வகிக்கிறீர்களென்றும், யாருடைய பிரதிநிதிகளாக இருக்கிறீர்களென்றும் நீங்கள் உணர்ந்துவிட்டாலோ......

தந்தை குடும்பத்தின் தலைவன். கடவுள் மனிதனைப் படைத்தபொழுது ஆதாமுக்கு முதலிடத்தைக் கொடுத்தார். ஆதாமின் விலாஎலும்பிலிருந்து ஏவாளை உண்டாக்கினார் என்று பழைய ஆகம வாயிலாக நாம் அறிகிறோம். முதற்படைப்பிலேயே கடவுள் கணவனுக்கு முதலிடத்தைக் கொடுத்தார்.

இதையிட்டு நாம் ஏதும் பிழையான அபிப்பிராயம் கொள்ளாதபடி அர்ச். சின்னப்பர்: "மனைவிமார் கர்த்தருக்கென்றாற்போல் தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படியக்கடவார்கள். ஏனெனில், கிறிஸ்துநாதர் திருச்சபைக்குத் தலைவராயிருக்கிறதுபோல புருஷனானவன் தன் மனைவிக்குத் தலைவனாயிருக்கிறான். ஆனால், திருச்சபை கிறிஸ்துநாதருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதுபோல, சகலத்திலும் மனைவிமார் புருஷர்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள்" (எபே. 5: 22-24)என்று எபேசியரை வேண்டி நிற்கிறார்.

கணவனின் தலைமைப்பதவியைக் குறித்தும், மனைவியின் கீழ்ப்படிதலைக் குறித்தும் அர்ச். சின்னப்பர் எழுதும்பொழுது, மனைவி கணவனுக்குப் பூரணமாய் அடிமைப்பட்டவள் என்றோ, அன்றேல் கடவுள் அவளை அடிமை என்னும் நிலைமையிற்தான் படைத்தார் என்றோ கூறவில்லை. ஆனால், இக்கீழ்ப்படிதல் இருவருக்கும் இடையில் இருக்கும் அன்னியோன்ய அன்பினால் அவள் அவனுக்கு அடிமைப்பட்டவளென்பதே அவர் கருத்து. இப்படியாக மனைவியை எச்சரித்து முடித்ததும், கணவருக்குரிய பெரிய கடமைகளில் ஒன்றை எடுத்துக்காட்டுகிறார் அர்ச். சின்னப்பர். "புருஷர்களே, கிறிஸ்துநாதர் திருச்சபையை நேசித்து, அதற்காகத் தம்மைத்தாமே கையளித்ததுபோல நீங்களும் உங்கள் மனைவிமாரை நேசியுங்கள்... அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிமாரை தங்கள் சரீரத்தைப்போல் நேசிக்கக்கடவார்கள். தன்மனைவியை நேசிக்கிறவன் தன்னைத்தானே நேசிக்கிறான். எவனானாலும்தன் மாம்சத்தை ஒரு போதும் பகைத்ததில்லை. ஆனால், கிறிஸ்துநாதர் செய்கிறதுபோல அவனவன் தன்சரீரத்தைப் போஷித்துப் பேணிக்கொண்டு வருகிறான். ஏனெனில், நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களும் மாம்சத்தில் மாம்சமும், எலும்பில் எலும்புமாயிருக்கிறோம்" ( எபே. 5: 25, 28-30.).

திரும்பவும் இவ்விடயத்தைப்பற்றிக் கடைசிவார்த்தையாக அவர் கணவன்மாரை எச்சரிக்கிறார். "உங்களில் ஒவ்வொருவனும் தன்மனைவியைத் தன்னைப்போல் நேசிப்பானாக" (எபே. 5: 33).

மனைவியை நேசிப்பதுபோல் பிள்ளைகளையும் கணவன் நேசிக்கவேண்டியது. இதைப்பற்றி அர்ச். சின்னப்பர் ஒன்றும் கூறவில்லை. இதை எம்மனிதனும் புரிந்துகொள்ளுவானென்பதுதான் அவர் நோக்கம்போலும். தன் மக்களை நேசிப்பது தந்தையின் பாரதூரமான கடமைகளில் ஒன்று. "பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக." இக்கட்டளை பிள்ளைகளுக்கே உரியது. பிள்ளைகள் அவர்களைக்கனம் பண்ணத்தக்கவிதமாய்ப் பிதாவும்மாதாவும் நடந்து கொள்ளவேண்டும். பெற்றோர் பிள்ளைகளை நேசித்து, வழிநடத்திக் காப்பாற்ற வேண்டியது பெரிய கடமை.

கரும்பு கட்டோடிருந்தால் எறும்பு தானாகவரும் என்பர் பெரியோர். அதுபோல் தந்தை தனக்குரிய கடமைகளை உணர்ந்து நடந்துவருவானாகில், அவன் மட்டில் அன்பு, வணக்கம், மரியர்தை பிள்ளைகளிடமிருந்தும், மனைவியிடமிருந்தும் தானாகக்கிடைக்கும். கடவுள் கட்டளையிட்டு விட்டாரே, இனி என்ன செய்வது? நாய்க்கு வேடம் போட்டால் குலைத்துத்தானே ஆகவேண்டும் என்றாற்போல், சிலர் நற்தந்தையரைப்போல் நடிப்பர். குடும்பத்தலைவர்கள் என்று நாம் முழுமனதுடன் இவர்களைப்போற்ற முடியாது. உண்மைத்தந்தைக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்களைக் கொண்டிருக்கிறவன் எப்போதும் அன்பு, மரியாதை என்பவற்றை எதிர்பார்த்திருக்கலாம்.

நான் ஒரு குடும்பத்தலைவன் என்று நாலுபேர் அறிய நடுவீதியில் நின்று பறைசாற்றுவோரும் உண்டு. ஆனால், அதற்குரிய பொறுப்புணர்ச்சியின்றியிருப்போரும் அவர்களே. நாள்முழுதும் வேலைசெய்துவிட்டு வீடு திரும்பும் நற்தந்தையைக் கண்டதும் பிள்ளைகள் "அப்பா...அப்பா என்று ஓடிவந்து, தந்தையை முதல் முத்தமிடுவது யாரென்று உரிமைப்போட்டி தொடங்கிவிடுவார்கள். ஆனால்,...தீயதந்தையைக் கண்டதும் பிள்ளைகள் "அப்பா வருகிறாரடா......" என்று கூவிக்கொண்டு மூலைக்கொன்றாய் ஒதுங்கிவிடுவார்கள். கொஞ்சிக்குலாவுவதைவிடக் குழந்தைகள் மூலைக்கொவ்வொன்று... அவன் குணமே அப்படி. மூச்சுவிட்டால் முதுகுசரியாய்விடும் என்று அக்குழந்தைகளுக்குத் தெரியும். அவனுடைய வாயிலிருந்துவரும் பேச்சு......அப்பப்பா! அதைப்பற்றி ஏன் நாம் பேசவேண்டும்? ஆனந்தமளிக்கவேண்டிய வீட்டை அல்லோலகல்லோலப்படுத்தி விட்டானே பாவி! வெட்கம்....வெட்கம்......யாருக்கு? பாவம்...அவன் மனைவிக்கு; குடிகாரன் பிள்ளையென்று பெயரெடுத்த ஒன்றுமறியாத அக்குழந்தைகளுக்கு; அந்தோ...பரிதாபம்...அக்குடும்பத்திற்கு. இப்படிப்பட்ட தகப்பன் தன் மனைவிக்கு இன்னும்கூடிய தலைப்பாரத்தை ஏற்றிவிடுகிறான். பிள்ளைகளைக் கண்காணிக்கும் பொறுப்பு அவள் தலையிலல்லவா விழுகிறது. "ஐயோ... நான் கடவுளுக்கு ஏற்காததைப்புரிகிறது மட்டுமலலாமல் எனது மனைவி மக்களைவாட்டி வதைக்கிறேனே" என்று இதை நன்றாய் உணர்ந்து உருகும்படி, அப்படிப்பட்ட நிலையிலிருந்து இதைவாசிக்கும் தகப்பனை— குடும்பத்தின் தலைவனை — மன்றாட்டமாய்க் கேட்கிறேன். அப்படிப்பட்ட தலைவனொருவன் தன்னை உணர்ந்து, தனது நடத்தைக்குப் பாவப்பொறுத்தலை அடைந்து 'நற்தகப்பன்' என்ற பட்டத்தையும் பெற்றுவிட்டானென்றால், இதையெழுதியதையிட்டு நான் மிகவும் சந்தோஷம் அடைவேன். பரலோகத்திலும் ஆனந்தமுண்டாயிருக்கும். இதை நமதுஇரட்சகரே கூறியிருக்கிறார். "தவஞ்செய்ய அவசியமிலலாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைவிடத் தவஞ்செய்கிற ஒரு பாவியின் நிமித்தம் மோட்சத்திலே அதிகசந்தோஷமுண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (லூக். 15: 7).

உடை, இல்லம், உணவு இவைகளைக் குடும்பத்திற்கு அளித்து உதவுவது குடும்பத்தலைவனின் பொறுப்பு. பிள்ளைகளுக்குஉரிய கல்வியூட்டும் வசதியை ஏற்படுத்துவதும் அவனுடைய பொறுப்பே. நற்தந்தையர்போல் சிலர் இவைகளைக் கவனிக்கிறார்கள். இனி என்ன செய்வது? நகத்தில் கழுத்தைக் கொடுத்தால் இழுத்துத்தானே ஆகவேண்டும் என்பது அவர்களின் எண்ணம். இப்படிப்பட்டவர்கள் இரண்டு மூன்று குடித்துவிட்டாலோ......பேசவாவேண்டும். வீட்டில் மனைவிமக்கள் பட்டினி. தந்தையோ தவறணையில் குடியிருப்பு. வேடம் போட்டால் நடப்பது இதுதான். வேடம்போட்டகழுதை முதுகுமுரிய அடிவேண்டிய கதையை நீங்கள் அறிவீர்கள். அதேபோல்தான் இதுவும்.

குடும்பத்திற்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் ஆடவனை நற்தந்தையென்று நாம் கூறவில்லை. இவ்வித உதவியுடன் ஞானச்சீவியத்திலும் குடும்பம் வளருவதற்கு வேண்டிய உதவிபுரிபவனே நற்தந்தை. கடவுளின் பொறுப்பை ஏற்றுநிற்கும் தகப்பன், அதே கடவுள் தனது இல்லத்தில் வைத்துவணங்கப்படுகிறாரா? அவருடைய கற்பனைகளை அனுசரிக்கிறதையிட்டுக் குடும்பத்தில் பிரச்சினை என்ன? கடவுளின் அன்பிலும் அறிவிலும் பிள்ளைகள் வளர்க்கப்படுகிறார்களா? குடும்பசெபம், மதபோதகம், குடும்பத்துடன் கடவுளைப்போற்றி வணங்குதல் இவைகள் முறையாய் நடைபெறுகின்றனவா என்று அடிக்கடி கவனிக்க வேண்டும். இவனே நற்தந்தை, குடும்பத்தலைவன்.

தன் குடும்பத்தை நேசிக்கும் கணவன் தன் குடும்பப் பிரச்சினையில் அதிகநேரம் செலவழிப்பான். எங்கும் எவ்விடத்திலும் இப்பிரச்சினை அவனை அரித்துக்கொண்டிருக்கும். மதிப்பிற்குரிய பிரசையாகத்தன் மக்களை ஆக்கிவிடவேண்டுமென்பது அவனுடைய கடமையாகிவிடும். இவ்வுலக வாழ்வுக்கும் மறுவுலக நித்தியசீவியத்திற்கும் உரியகல்வி அளிப்பது தனது கடமைதான் என்பதை நன்கு உணருவான். ஆனால், வேலை வேலை என்று அடிக்கடி வீட்டில் தங்காவிட்டால்,

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## ஹங்கேரிய விடுதலைக்கு ஐ. நா. விடம்விண்ணப்பம்

ஹங்கேரியின் சுதந்திரக்கிளர்ச்சியினது 5-ம் ஆண்டுத்தினத்தைக்குறிப்பிடும் நோக்கமாக ஐ. நா. ஸ்தாபனத்துக்கு அனுப்பவென்று ஒருகோடி மக்களின் கைச்சாத்து அடங்கிய விண்ணப்பம் ஒன்று அனுப்பப்படவிருக்கின்றது. ஹங்கேரியிலுள்ள அரசியற் கைதிகள் எல்லாரையும் விடுதலைசெய்யும்படியும், அன்னியதுருப்புகளை வெளியேற்றும்படியும் ஐ. நா. ஸ்தாபன மேற்பார்வையில் சுதந்திர தேர்தல் நடத்தும்படியும் இவ்விண்ணப்பத்தில் கேட்கப்படும்.

## வத்திக்கான் இராச்சியத்தின் முதற்குழந்தை விவாகஞ் செய்தார்

வத்திக்கான் ஓர் இராச்சியமானபின் பிறந்த முதற்குழந்தை அந்தோனியோ லபெல்லா அங்குள்ள திரு இருதயநாதர் கோவிலில் விவாகஞ் செய்தார்.

குதிரைப்பாகரும், 32 வயதுடைய வருமான அந்தோனியோ பாப்புவின் மாளிகையில் பணிசெய்யும்தொமாசோவின் மகனுவர். 1929-ம்ஆண்டுமாசியில் லத்தறன் உடன்படிக்கையின் விளைவாக வத்திக்கான் இராச்சியம் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டபின் பிறந்த முதற்குழந்தை இவரே.

## தபால்மூலம் மதக்கல்வி

ஐக்கிய அமெரிக்காவில் பிலடெல்பியாவிலுள்ள அர்ச். சார்ள்ஸ் குருமடம் கடந்த ஒன்பதுஆண்டுகளாகத் தபால் மூலம் கத்தோலிக்கமதத்தை இனமாகக் கற்பித்து வந்திருக்கிறது.

தபால்மூலம் நடத்திவருங் கல்விக்குரிய பரீட்சை நடாத்தியும், விடைகளைப் பார்வையிட்டும் வருகின்றது. மதஅறிவுதேடும் ஒவ்வொருவரும் ஒரு குருமாணவனுக்கு எழுதித் தனது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளலாம். எம்மதத்தவரும் இக்கல்விமுறையிற் சேர்ந்துகொள்ளலாம.

## 25,000பேர் பூசைக்குச் சமுகமளித்தனர்

ஏர்பெட் (கி. ஜேர்மனி) பட்டணத்தில் நடந்த மாதாதிருசேத்திர யாத்திரையில், முன் ஒருபோதும் கண்டிராதவாறு 25,000 மக்கள் கலந்துகொண்டனர்.

அதிகப்பற்ருகத் துரிஞ்சியா, எயிக்ஸ்பெல்ட் பிரதேசங்களிலிருந்து வந்த யாத்திரிகர்கள் வான முகட்டின்கீழ், மேற்றிராசன ஆலயமுன்றிலில் திருப்பலிக்குச் சமுகமளித்தார்கள். வேத நாடகமொன்றைப் பார்த்துவிட்டு, ஊர்வலமாக மீண்டும் அவ்வாலயச் சதுக்கத்துக்கு வந்தனர்.

புல்டாவின் உதவி மேற்றிராணியார் பிறெஸ் பேர்க் சமாதான வேண்டுகோளொன்று விடுத்தார். புல்டா மேற்றிராசனம் கி. ஜேர்மனியிலும், மேற்கிலும் இரண்டாகத் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

## குருமடத்தை மூட எத்தனித்த பொதுவுடைமையருக்கு 1,000 பேர் எதிர்ப்பு

போலந்தில் தொருண் பட்டணத்திலுள்ள இரட்சகர்சபைக் குருமடத்தை மூடுவதற்குப் பொதுவுடைமை அதிகாரிகள் எத்தனித்தபொழுது 1,000 போலந்தர்வரை திரண்டு எதிர்த்தார்களெனச் செய்தி கிடைத்திருக்கிறது

கோயில்மணிகளை அடித்ததும் சனங்கள் பாதுகாப்புக்குத் திரண்டுவந்தனர். நடந்த குளப்பத்தில் பலர் சிறுகாயமுற்றனர்; 10 பேர் கைதாகினர்.

## அமெரிக்க உயர்நீதி மன்றத்திற்கு நீக்கிரோவர் நியமனம்

உவாஷிங்கரனிலுள்ள அமெரிக்க கத்தோலிக்க சர்வகலாசாலையின் சட்டப் பட்டதாரியான திரு. ஒடிசிமித் மிச்சிகன் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்றிருக்கிறார். 1959-ல் கணக்குப் பரிசோதக இலாக்காவின் தலைவராக நியமனம்பெற்ற முதல் நீக்கிரோவர் இவரேயாவர்.

## சூருவளியில் கஸ்தல் கண்டல்போ சேதமுற்றது

அண்மையிற் தெற்கு இத்தாலியின் கிராமப்புறங்களில் வீசிய சூறைக்காற்றினுல் கஸ்தல் கண்டல்போவிலுள்ள பாப்புவின் கோடைகால வாசஸ்தலம் பெருஞ் சேதத்திற்குள்ளாயது.

பல நூறு வயதுள்ள மரங்கள் பெயர்க்கப்பட்டன; பூங்காவை வளைந்திருக்கும் சுவரின் ஒருபாகம் இடிந்தது; பாப்புவின் இருப்பிடத்தின் கூரைஒன்றும் சேதமாக்கப்பட்டது. சேதம் 5,75,000 பவுண் என மதிக்கப்படுகிறது.

## சிறைவாசிகளமைத்த சிற்ருலயம்

கத்தோலிக்கருக்கும், புரட்டெஸ்தாந்தருக்கும, யூதருக்கும் உபயோகமாகக்கூடிய ஆலயமொன்றை உவாஷிங்ரனுக்கு வெளியேயுள்ள சிறைச்சாலையிலுள்ள குற்றவாளிகள் கட்டியிருக்கின்றனர். விசாரணைக்குரவரின் மேற்பார்வையில் அமைந்த இக்கோயிலை நிர்மாணிக்க ஒரு நாஸ்திகன் கட்டடக் கலைஞனுகவும, கொலைக்காரனெருவன் சித்திரவித்தகனுகவும்உதவியுள்ளனர்.

குற்றவாளிகளைப் பார்த்துச் செல்லும்போது கள்ளக் கையொப்பமிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நீண்டகால மறியற்தண்டனை பெற்றிருக்கும் ஒருவனைக்கண்டு அவன் அனுபவம் வாய்ந்த சிற்பிஎன அறிந்து, சிற்ருலயமொன்றுக்குத் திட்டம் அமைக்கும்படி கேட்டார். அவனே தான் ஒரு நாஸ்திகன் எனவும், முன் ஒருபோதும் கோயிலுக்குச் சென்றதில்லை எனவும் கூறினுன். தேவையை விளக்கினுர் குருவானவர். 1956-ம் ஆண்டு திட்டம் தயாராகியது. கட்டட அமைப்புக்கு அவசியமான 71,000 பவுண் பெறுமதியான பொருள் தேடவேண்டியிருந்தது. கைதிகள் வேலைசெய்தால் பொருள்தருவதாக வாக்களித்தனர் அதிகாரிகள். நீண்டகாலமாக எதிர்பார்த்த கனவு நனவாயிற்று.

குற்றவாளிகள் 1958இல் வேலையை ஆரம்பித்தனர். கொலைக்குத் தண்டனை பெற்றிருந்த ஒருவன் சித்திரகாரனுகவும், களவுக்குத் தண்டனை பெற்றிருந்தஒருவன் சிற்பியாகவும் உழைத்து, கத்தோலிக்கரின் பகுதிக்குத் தேவையான சிலுவைச் சுரூபமொன்றைச் செதுக்கினர். அங்கு தொடர்பாகப் பூசை நிறைவேற்றுகிறார் விசாரணைக் குரு. நாடோறும் நன்மை அருந்துகிறான் நாஸ்திகனுகவும், கள்ளக் கையொப்பமிட்டவனுமாயிருந்து மனந் திரும்பிய கட்டடக் கலைஞன்.

## 30 இல்லறத் தொண்டர்

இல்லற மிஷனரிச் சேவையாளராக நைஜிரியாவுக்குச் சென்று தொண்டு செய்யவிரும்பிய முப்பது பேர் டப்பிளின் நகர இஸ்பிரீத்துசாந்து தேவாலயத்தில் பாடற்பூசைக்குச் சமுகமளித்தனர்.

இத்தொண்டர் யாவரும் சர்வகலாசாலைப்பட்டம் பெற்றவர்கள். இஸ்பிரீத்துசாந்து சபைக்குருமாருக்கு ஆசிரியராக உதவி புரிபவர்கள்.

## யாழ்ப். மேற்றிராசன கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

## ஆசிரியர் ஞானெடுக்கம்

### ஆண்கள்

(13-12-61—17-12-61)

கத்தோலிக்க ஆசிரியர்களின் ஆன்ம நலன் கருதி எமது சங்கம் 13–12–61 புதன்கிழமை மாலை தொடக்கம் 17-12-61 ஞாயிற்றுக்கிழமை காலைவரை மடுவில் ஒரு ஞானெடுக்கம் நடைபெற ஒழுங்குகள் செய்துள்ளது.

மேற்படி ஞானெடுக்கத்திற் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் தயவு செய்து 5–12-61 க்கு முன்னர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து செலவுவிபரங்களை அறிந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அ. சின்னப்பு,
(யா. மே. க. ஆ. ச. காரியதரிசி)

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், 22-11-61.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

திருக்குழந்தை யேசு, பரி. சதாசகாய மாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். யூதாததேயு அப்போஸ்தலர், அர்ச். அந்தோனியார் ஆகிய இவர்களிடம் நான் கிடைக்க வேண்டுமென்று கேட்டவரத்தை அடைந்துகொண்டேன். அவர்களின் நாமம் புகழப்படுவதாக. இன்னும் நான் அவர்களிடம் கேட்கும் வரங்களை அடைந்து கொள்வேன் என்ற நம்பிக்கையால் தூண்டப்பட்டும், பரி. சதாசகாயமாதாவிடமும், கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான அர்ச். யூதா ததேயுவிடமும் வைத்த நேர்த்தியின்படியும் இதைப் பிரசுரிக்கிறேன்.

சில்லாலை, ஜெயம்.

* * *

சதாசகாயத்தாயிடம் அவவின் மைந்தனுகிய யான் இரந்துகேட்டுக்கொண்டபடி எனது வருத்தம் குணமுற்றமைக்கு நன்றிஸ்தோத்திரமாக இதைப் பிரசுரிக்கிறேன். இன்னும் எனது மன்ருட்டுக்களுக்குச் செவிசாய்த்தருளவேணுமென்று வேண்டிநிற்கும்,

தாயின் மைந்தன்.

உதயதிசை,
ஊர்காவற்றுறை.

* * *

பரலோக பூலோக இராக்கினியே! பாழடைந்த கணவாயில் புதிதாய்உதித்த வானவில்லே, அண்டினேரை அரவணைக்கும் அமலஅன்னையே, பரி. சதாசகாய மாதாவே உமது இரக்கத்தினுலும், அர்ச். அந்தோனியாரின் விசேட மன்ருட்டினுலும் நான் சத்திரசிகிச்சையினின்று காப்பாற்றப்பட்டதுமன்றி, எனது காணிவழக்கில் இருந்து வெற்றியீட்டியதற்காகவும் நன்றிகூறி, இன்னும் நான்கேட்கும் விண்ணப்பங்கள்யாவும் நிறைவேற்றித் தரும்படி இரந்துமன்ருடுகிறேன். பிரசுரிக்கத் தாமதித்தமைக்கு மன்னிப்புக்கோரும்

மாதாவின் அடியாள்.

## கத்தோலிக்கமும் கம்யூனிஸமும்

"ஏழைத் தொழிலாளியை முன்னேற்ற கத்தோலிக்கமும் கம்யூனிஸமும் ஒன்றுசேர்ந்தால் என்ன?" என்று ஒரு பத்திரிகை நிருபர் மொன்சிஞேர் கர்டைன் சுவாமிகளிடம் கேட்டார். "தனிமனிதர் ஒரு சில நோங்களில் ஒரு தனிக் குறிக்கோளுக்காக இவ்வாறு ஒருவேளை ஒன்று சேரலாம். ஆனுல், கத்தோலிக்கம் கடவுளை மறுக்கும் கம்யூனிஸத்துடன் ஒருபோதும் ஒன்று சேரவே சேராது," என்ருர் கர்டைன் சுவாமிகள். "இளம் கிறிஸ்துவ தொழிலாளிகளின்" உலகமாகாட்டை ரியோர்-டி-ஜனய்ரோவில் நடத்தகையில் இவ்வாறே கூறினுர் சுவாமிகள்.

## இளவாலை அர்ச். என்றியரசர்கல்லூரிப் பிரவேசப் பரீட்சை 1962

மேற்படி கல்லூரியில் 1962-ம் ஆண்டு சேரும் மாணவர்களின் பிரவேசப்பரீட்சை, நிகழும் மார்கழிமாதம் 28-ந்திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு, கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி ஆரம்பதினம்: 3-1-1962

அதிபர்

என்றியரசர் கல்லூரி,
இளவாலை. 1-12-1961.

**செப அப். சபை வெளியீடு**

## மார்கழி மாதம்

பொதுக்கருத்து—நீதிக்கும், நியாயத்துக்குமேற்ப இவ்வுலகப் பொருட்களை மக்கள் பகிர்ந்து கொள்வதற்காக வேண்டிக்கொள்வது.

வேதபோதககருத்து—நன்மை பயக்கும் விசுவாசஒளி விசுவாசப்பரப்புதற் திருச்சங்கத்தின் தலைமையின் கீழ் பூமியின் கடைக்கோடிகளுக்கும் செல்லும்படியாக மன்ருடிக்கொள்வது.

## ஆரணம்கூறும் அணங்கு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்ட ஆண்மை இன்றும் எழுந்து நிற்கவில்லை! ஆம். ஆண்மை பெண்மையின் ஆதிக்கத்தில் அழிவைத் தேடிக்கொண்டது!

ஆனுல், அழிவில் ஆக்கத்தைத் தேடும் அருள்வள்ளல், பெண்ணுல் ஏற்பட்ட அழிவைப் பெண்ணுலேயே ஆக்கமுறத் திட்டமிட்டார். தனது உள்ளக்கிழியில் வண்ண ஓவியமாகத் திகழ்ந்த பெண்ணை, உலகில் நடமாடவிடும் காலம் வந்துவிட்டதை உணர்ந்தார். அந்தப் பெண்ணின் பெருமை வாய்ந்த பிள்ளையைக் கொண்டு சர்ப்பத்தின் சதியை நசுக்கி, பெண்மையின் ஆதிக்கத்தால் அழிந்த பேரின்ப வீட்டு நிலையை மீட்டளிக்கத் திட்டம் தீட்டினுர்.

பரமனின் திட்டம் வெற்றிபெற்றது. பரமண்டலங்களின் ஆகடு திறந்தது. பாரோர்க்கு வாழ்வளிக்கும் பரம கன்னிகை தோன்றினுள்.

அவள், முட்களின் நடுவில் தோன்றும், தூயவெண் லீலிபோல், மாசுற்ற மக்களின் நடுவே, தேசுற்று விளங்கினுள். ஆரிருளை அகற்றும் அருணனது உதயத்துக்குமுன் தோன்றும் அழகிய விடிவெள்ளிபோல், நீதி ஆதித்தனுகிய, நித்திய சுதனின் வருகையை முன்னறிவிக்கும், மனுக்குல இரட்சணியத்தின் விடிவெள்ளியாய் உதித்தாள். அவள் "சூரியனை ஆடையாகவும், சந்திரனை மிதியடியாகவும், தாரகைகளை முடியாகவும் அணிந்தவளாய் வானத்தில் தோன்றினுள்" என்றும், புனித அருளப்பர் மறைபொருளாகத் தனது காட்சியாகமத்தில் கூறுகிறார்!

இவளே, ஆரணம் கூறும் அணங்கு. இந்த அணங்காகிய தேவ கன்னிகையைத்தான் பக்தி சுவை நனி சொட்டச் சொட்டப் பின்வருமாறு பாடி, அகமகிழ்கிறார் அன்பர் வீரமாமுனிவர்!

"மீன்பூத்த சிரசழகி அருள்பூத்த
விழியழகி மேலுலாவும்
பான்பூத்த மெய்யழகி பரன்பூக்கும்
கையழகி பணிந்துதிங்கள்
தான்பூத்த பதவழகி தயைபூத்த
தனியழகி மாமதுர
தேன்பூத்த மொழியழகி தெய்வத்
திரு தையலாளே!"

என்பது அவர் வாக்கு.

—'சத்தியபோதினி'

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday December 9-1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org